போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

ஓராண்டு ரூ. 6 8 0
6 மாதம் ரூ. 3 4 0

"போர்வாள்" நிலையம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

ஆசிரியர்கள்: காஞ்சி. மணிமொழியார்
ரா. இளஞ்செழியன், B.A. (Hons).

திராவிடர்
வார வெளியீடு

தனி இதழ் அணா 2
வெளி நாடு அணா 2½

வாள் 4 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1982 தை 14 — 27—1—51 சனிக்கிழமை | வீச்சு 21

சமதர்மத் தந்தை
காரல் மார்க்ஸ்

[தங்கவேலர்]

சமதர்மத் தந்தை என்ற பெய ...ரிலே இன்றைய உலகத்துக்கு அறி ...முகமாகிவிட்ட காரல் மார்க்ஸ் 1818-ம் வருடம் ஜெர்மனியிலுள்ள ...ட்ரியர் என்ற சிற்றூரிலே பிறந்து வளர்ந்தார். அப்போதைய ஜெர் மனியிலே அரசியல் வானம் கும் மிருட்டாகக் காட்சி தந்தது. சமூ ...கத்திலே பல ஏற்றத்தாழ்வுகள் ...ர்த்தனமாடின. மக்கள் வாழ்வு ...றத்தாழ மரணபுரி வாசமாகவே ...இருந்தது!.........இந்தச் சூழ்நிலையி ...லேதான் மார்க்ஸ் வளர்ந்து—வாலி ...ப் பருவத்தின் வாசலிலே கால் ...வைத்தான்.

...வயது 18 நடந்து கொண்டிருந் ...து! மார்க்ஸின் தந்தை அவனை ...பர்லின் சர்வகலாசாலைக்கு ...அனுப்பிவைத்தார். பலதரப்பட்ட ...கருத்துக்கள் அலைமோதும் உள் ...ளங் கொண்ட சர்வகலாசாலை ...மாணவர்களிடையே கல்வி ...பயின்றுவந்தது மார்க்ஸுக்குமிரம் ...ப் பிடித்தது. மாணவர் பலரின் ...உள்ளங்களைத் தன் இனிய உரை ...யாடலால் கவர்ந்தான் மார்க்ஸ். ...அவனுக்கு ஓய்ந்த நேரங்களிலே பெரிய பெரிய தத்துவங்களை அடிப் படையாகக் கொண்ட கட்டுரை களைத் தீட்டிவைப்பான். ஒவ்வோர் சமயம் அந்தக் கட்டுரைகள் முந் நூறு, நானூறு, பக்கங்களுக்குக் கூட நீண்டுவிடுவதுண்டு. கட்டுரை முடிந்ததும் உடனே திருப்பிப்படிப் பான். கட்டுரையிலே சுவை குன்றி யிருப்பதுபோலவும், தன்னுடைய தர்க்கவாதங்கள் வெறும் கேலிக் கூத்துகள் போலவும் அவனுக்குத் தோன்றும். உடனே சுக்குநூறு கக் கட்டுரைக் காகிதங்களைக் கிழித் துக் குப்பைக் கூடையிலே திணித்துவிடுவான் அவற்றை.

இப்படி, மார்க்ஸ், தன் மாணவ வாழ்விலே அடிக்கடி செய்வ துண்டு! ஆனால் ஒருவழிக்கு அவ னின் இம்மாதிரியான செய்கை களால் பின்னர் நலம் விளையத் தான் செய்தது.........இம்மாதிரி யான போக்குகளால் மார்க்ஸ் கட்டுரைத் துறையிலே நல்லதோர் பயிற்சியைப் பெற்றான்.

தன் கல்லூரி வாழ்வைவிட்டு வெளியேறியதும் மார்க்ஸுக்கு ஒரே ஒரு விருப்பம்தானிருந்தது. தான் எப்பாடு பட்டாகிலும் கல் லூரியிலே விரிவுரையாளராக (LECTURER)ப் பணியாற்ற வேண்டும் என்பதுதான் அவனின் அடங்காத அவா! இந்த எண்ணங் கொண்டே "போன்" என்ற சர்வ கலாசாலைக்குவிண்ணப்பம்செய்து கொண்டான். ஆனால், சர்வகலா சாலை சங்கத்தார் மார்க்ஸின் சேவையை ஏற்றுக்கொள்ளத்தயா ராயில்லையென அறிவித்து விட் டார்கள்.

உள்ளம் உடைந்து போனான் மார்க்ஸ். சிலகாலம் தத்துவ சாத் திரங்களை ஆராய்வதிலே தன் சிந்தையைப் பதித்து தத்துவ சாத் திரத்தில் டாக்டர் என்ற பட்டத் தையும் பெற்றான். தத்துவ சாத் திரம் பற்றிய ஆராய்ச்சி அவனுக் குக் கசந்து விட்டது. புதிய குறிக் கோள்களை நாடி ஓடியது மார்க் ஸின் மனம். அந்த நிலையிலேயே பல கட்டுரைகளைத் தீட்டி அப் போது புகழோடு உலவிய "ரீனிச் கெட்டன்" என்ற பத்திரிகைக்கு அனுப்பினார். "ரீனிச் கெட்டன்" ரைன் மாகாணத்திலுள்ள விப்ரல்

கட்சியினரின் ஆதரவால் உலவி வந்தது. அந்த ஏட்டிலே தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருந்தன மார்க்ஸின் கட்டுரைகள். எல்லோர் இதயத்தையும் கட்டிப் பிடித்திழுத்தது அவரின் எழுத்தோவியம். பத்திரிகையின் விற்பனையும் அதிகப்பட்டது! பத்திரிகை நிர்வாகிகள் மார்க்ஸை அவசரமாக அழைத்து "ரீனிச் சிட்டங்" குக்கு ஆசிரியராகவே அமர்த்தி விட்டனர். சாதாரண எழுத்தாளர் நிலையிலிருந்து மாறி...... ஆசிரியர் தகுதியை யடைந்ததுமே மார்க்ஸின் எழுத்திலே புதியதோர் ஜீவசக்தி பிறந்தது! அவர் தீட்டிய தலையங்கமென்றால் எத்தனை தரம் வேண்டுமானாலும் சுவைத்து இன்புற எண்ணமிட்டனர் மக்கள். அப்போதைய சர்க்காரும் அவரது அதியற்புதத் தலையங்கங்களுக்குத் தனி கவனிப்பை ஏற்படுத்திக் கொண்டனர்.

மார்க்ஸின் எழுத்துக்களை அரசினர் அலசி ஆரம்பிக்கவும், அரசினரை நிமிர்ந்து பார்த்தார் மார்க்ஸ்! தனது பேனாவுக்குப் புதியதோர் வேலை கொடுத்தார். அரசினரின் குறைபாடுகளை ஒன்றாகத் தொகுத்து வைத்துக்கொண்டு...... சமயம் வாய்க்கும் போதெல்லாம் சர்க்காரை இடித்துரைத்துத் தலையங்கங்கள் தீட்டினார். அப்போது மோசேல் பள்ளத்தாக்கு விவசாயிகளின் நிலை மிகப் பரிதாபத்திற்குரியதாக இருந்தது. சட்டசபைத் தலைவர் வீம்புப் பேச்சுகளை அள்ளி வீசிக்கொண்டிருந்தார்' தொல்லைக்கு ஆளான விவசாயிகளின் சார்பாக மார்க்ஸ் ஒரு தலையங்கத்தைத் தீட்டி ஏழையின் குரலுக்கு மதிப்புக்கொடு என்று அரசினரை வேண்டினார். மமதையின் சின்னமான ஆதிக்கபுரி செவி சாய்க்கவில்லை மார்க்ஸின் குரலுக்கு. அதற்குப் பதிலாகப் "பொருளாதாரப் பிரச்னையைக் கிளப்பிவிடும் புல்லன், மார்க்ஸ்' ஆகவே, அவனைச் சதிகாரர் கூட்டத்திலே வைத்துப் பாதுகாப்புப் போட வேண்டும்" என்று அரசினர் அறிவித்து விட்டனர்.

தொல்லைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்தன மார்க்ஸை. போலிஸாரின் கண்கள் எந்த நேரமும் மார்க்ஸின்மேலே பதிந்திருந்தன. அந்த நேரத்திலே பத்திரிகாலயத்திலிருந்து தற்காலிகமாக விலகிக் கொண்டார். ஷேக்ஸ்பியர் நாடகங்களிலுள்ள எழில்மிகு நிகழ்ச்சிகளை உலகோர்க்கு எடுத்துரைக்கும் பணியிலே ஈடுபட்டிருந்த பாளன் என்ற மேதையின் திருக்குமாரியை........ ஜென்னி எனும் பெயர்கொண்ட அழகுத் தெய்வத்தை மார்க்ஸ் காதலித்து மணம் செய்து கொண்டார் 1843-ல்.

புதிய தம்பதிகள்........பாரிஸ் பயணமாயினர். உல்லாச வாழ்வுக்கு அல்ல! ஆயிரமாயிரம் ஆரணங்குகள் சிரித்துப் பேசி பவனி வரும் அந்த பாரிஸ் பட்டினத்திலே மார்க்ஸ் மன்மதப்புரி பயணம் நடத்தவரவில்லை. தேய்ந்து கொண்டிருக்கும் மனித சமுதாயத்துக்கு அதன் நோய் போக்கும் மருந்தைத் தேடித்தரத்தான், மார்க்ஸ், தனதருமைத் துணைவியரோடு பாரிசுக்கு வருகை தந்தார்.

பாரிசிலே அர்னால்டுரூஸ் என்ற ஒரு நண்பனிருந்தான் மார்க்ஸுக்கு. அவனும் மார்க்ஸுமாகச் சேர்ந்து 'பிராங்கோ" என்ற பெயரிலே ஏடொன்று வெளியிடத் திட்டமிட்டனர். எவ்வளவோ கஷ்டங்களுக்கிடையே "பிராங்கோ" வெளி வந்தது. ஆனால் முதல் இதழிலேயே அந்த ஏடு மரணபுரிப்பயணம் நடத்திவிட்டது. பத்திரிகை முதல் இதழிலேயே நின்றுவிட்டது வருத்தமாகத்தானிருந்தது மார்க்ஸுக்கு, என்றாலும் அந்த ஒரே இதழின் மூலமாக சில நன்மைகளும் மார்க்ஸை வந்தடையத்தான் செய்தன.

ஏஞ்சல்ஸ் என்ற எழுத்தாளர், "பிராங்கோ"வின் முதல் இதழுக்கு ஒரு கட்டுரை உதவியிருந்தார். அந்தக் கட்டுரை எல்லோரையும் விட மார்க்ஸைத்தான் அதிகம் சிந்திக்கத் தூண்டியது. அழகான கருத்துக்கள்! புரட்சியை உருவகப்படுத்தும் எழுத்துக் கோர்வைகள்! ......இவையெல்லாம் ஏஞ்சல்ஸின் கட்டுரைச் சிறப்புகளாக அமைந்தன. அந்த அறிவுச் சிற்பியைச் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டால் தன் எதிர்காலத்திட்டத்திலே ஓர் அதிசய மாறுதலேற்படுமென மார்க்ஸ் திண்ணமாக எண்ணினார். அதன்படியே சிலகாலத்திலே பாரிசில் மார்க்ஸும்—ஏஞ்சல்ஸும் சந்தித்தனர். அந்த முதல் சந்திப்பு அவர்களின் அன்புக்கு அரும்பு விட்டதுபோல அமைந்தது. பழமைக் கொள்கைகள், பொருளாதார முட்டுக்கட்டைகள், பாசிசப் போக்குகள் ...... இவைகளையெல்லாம் தாக்கித் தகர்ப்பதற்கு அந்த இருவரும் உறுதிபூண்டு கொண்டனர்.

எங்கெங்கு அதிருப்திக் கனல்கள் கிளம்பி மக்கள் நலன் எனும் கூரைமீது விழுகிறதோ அங்கெல்லாம் மார்க்ஸும்—ஏஞ்சல்ஸும் ஓடோடிச்சென்று ஆறுதல் தேறுதல் கூறி அழுது கோழையாகிக் கொண்டிருந்தோரை ஆண்மையாளர்களாக்கும் பெரும் பணியிலே ஈடுபட முனைந்தனர்.

பழமைக் கொள்கைகளை எதிர்த்து நின்று பசுஞ்சோலையாக்கிக் கொள்ளுங்கள் உங்கள் வாழ்வை என்று உலகோர்க்கு உரைக்கும் முறையிலே ஏஞ்சல்ஸும்—மார்க்ஸும் "பரிசுத்தக் குடும்பம்" என்ற பெயரிலே ஏடொன்று தீட்டி வெளியிட்டனர்.

மார்க்சுக்கு நல்ல நிலை பிறந்தது. முதல் முதலாக அன்புத் தோழர் ஏஞ்சல்ஸ் அவருக்குக் கிடைத்தார். அவரின் பேருழைப்பால் ஆயிரக்கணக்கான புரட்சி உருவங்கள் மார்க்ஸின் கட்டளைக்குக் கைகட்டி நிற்கும் காட்சி உருவானது. பிரஸ்ஸல்ஸில் "ஜெர்மன் தொழிலாளர் சங்கம்" என்ற பெயரிலே ஓர் இயக்கங்கண்டு—முதலாளித்துவப் புலிகளின் பசிக்குப் பலியாகிக்கொண்டிருந்த பாட்டாளிப் புள்ளிமான்களைக் காக்கத் திட்டம் தீட்டினார் மார்க்ஸ். ஏஞ்சல்ஸும் ஆங்காங்கே கூட்டங்களை ஏற்பாடு செய்து தங்கள் கொள்கைகளை விளக்கினர். சிறு செய்தித்தாளொன்றையும் தங்கள் கட்சிக்கென ஏற்படுத்திக்கொண்டார்கள் மார்க்சும்—ஏஞ்சல்சும்! மார்க்ஸ் கண்ட இயக்கம் நாட்டிலே புயலெனப் பணியாற்றியது. புல்லர்கள் பொசுங்கும் நிலை பிறந்தது. நல்லநல்ல திட்டங்களை உடனிருந்து மார்க்ஸோடு செய்து வந்தார் ஏஞ்சல்ஸ்.

ஏஞ்சல்ஸ் பெரியதோர் தொழிற்சாலை நிர்வாகியின் ஒரே செல்வப் புதல்வன். ஆடம்பரத்தையும் உல்லாச வாழ்வையும் துச்சமென ஒதுக்கித் தள்ளிவிட்டுப் புரட்சிப் படையிலே அங்கம் வகித்தார். ஏஞ்சல்ஸின் செல்வத் தந்தையார் மகன் போக்கிலே அதிருப்தி கொண்டு ஏஞ்சல்ஸுக்கு செய்து

வந்த உதவிகளை நிறுத்திக் கொண்டார். தந்தை தனக்குச் செய்யும் சில சுயநல உதவிகளைவிடத்தான் நாட்டு மக்களுக்குச் செய்யும் உதவியைத்தான் ஏஞ்சல்ஸின் மனம் பெரிதும் விரும்பியது. ஆகவே தனதருமைத் தந்தையாரின் சீர்மிகு உதவிகளை ஒதுக்கிக் கொண்டு "ஜெர்மன் தொழிற் சங்க" அலுவலகத்திலேயே வசித்துக்கொண்டு ஏஞ்சல்ஸ் முழுநேர ஊழியராகப் பணியாற்றத் துவங்கினார்.

மார்க்ஸின் அதியற்புத பிரச்சாரத்தால் தூங்கிக்கொண்டிருந்த மக்கள் சக்தி விழிப்புற—ஆரம்பித்தது. தங்கள்மீது சுமத்தப்பட்ட அடிமைத்தளைகளை அகற்ற தொழிலாளர் வர்க்கம் குமுறிக் கொண்டிருந்தது. புரட்சித் தீ எந்த நேரத்தில் நாடு பூராவும் பற்றிக்கொள்ளுமோவென அஞ்சினர் ஆதிக்கபுரியினர். அவர்கள் அச்சம் வீண் போகவில்லை! முதன் முதலாக பிரான்சு நாட்டிலே புரட்சித் தீ 1848-ல் அரும்பு விட்டது. அப்போதைய பிரெஞ்சு மன்னன் லூயி பிலிப்......ஓடி ஒளிய இடந்தேடிக் கொண்டிருந்தான். மக்கள் சக்தி அந்த அளவிலே கிளர்ந்தெழுந்தது. சிமானும் அவனுடைய பிரதிபிம்பங்களான சின்னங்களும் தாக்கித் தகர்க்கப்பட்டன. விரைவிலேயே, ஆதிக்கம் செலுத்தினோர், நாட்டைவிட்டு ஓட்டமெடுத்தனர். முடியாட்சி ஒழிந்து—குடியாட்சி பூத்தது.

பிரான்சில் மட்டும் அல்ல இந்த நிலை! ஐரோப்பாக் கண்டம் முழுமையுமே புரட்சித் தீ வளர்ந்து பரவலாயிற்று! இங்கிலாந்திலே செல்வாக்குப் பெற்றிருந்த சார்ட்டிஸ்டு இயக்கம் புரட்சியை முன்னின்று நடத்தியது! நேப்பிள், மிலாந்து, வேனிஸ், ஜெர்மன் போன்ற இடங்களிலெல்லாம் அடக்குமுறை அதிபர்கள் பட்டபாடு கொஞ்சமல்ல! பெர்லினிலே புரட்சிப் படையை அடக்க ராணுவத்தை ஏவிவிட்ட வில்லியம் பிரடரிக் மன்னன் கடைசியிலே மக்கள் சக்திமுன் மண்டியிட்டான். மிருகத்தனமாக நடந்து கொண்ட ராணுவத்தினரில் பெரும் பகுதி மாண்டொழிந்தனர். அந்த இறந்தவர்களின் தகனத்தை மன்னன் வில்லியம் பிரடரிக் கண்டு கண்ணீர் சிந்தும்படி அவன் கண் முன்னரேயே அந்தக் காட்சியை நடத்திக் காட்டினர் உரிமை முழக்கம் எழுப்பிய காளைகள்!

பவேரிய நாட்டு மன்னன் புழுப்போலத் துடித்தான் புரட்சி தன் நாட்டிலும் காட்டுத் தீயென வளருவதுகண்டு! அவனருமைக் காதலி "ஸ்பானிஷ்" சிங்காரியைமன்னன் மறந்துவிட்டு நாட்டைவிட்டு ஓடும் நிலையை புத்துலகு காணத்துடித்த மேதைகள ஏற்படுத்தி வைத்தனர்.

.....இந்த மாதிரியான முனைகளிலே ஐரோப்பா முழுவதும் எழுச்சிக் குரல்—ஒலித்துக் கொண்டிருந்தது! மார்க்ஸின் பொறுப்பும், கவலையும் உயர்ந்து கொண்டிருந்தன. புரட்சியினிடையே புல்லர்கள் தோன்றி எங்கே புரட்சிப் புகையை அடக்கி விடுகிறார்களோவென்ற அச்சம் அவருள்ளத்திலே அடிக்கடி எழும்பிக் குதித்துக் கொண்டுதானிருந்தது. புரட்சிச் செய்திகளை அவ்வப்போது நாட்டினருக்கு விளக்கிக் கொடுப்பதற்காக "நியூரீனிச்—சிட்டங்" என்ற பெயரிலே ஏடொன்று நடத்தி வந்தார் மார்க்ஸ். புரட்சிக்காரர்களின் கொள்கை விளக்கத்திற்கு அந்த ஏடு நல்லதோர் கருவியாகப் பணியாற்றி வந்தது. ஏஞ்சல்சும் சும்மா இருக்கவில்லை! பாரிசிலிருந்து, லண்டனுக்கும், லண்டனிலிருந்து—பாரிசுக்குமாகப் பறந்து பறந்து பணியாற்றிக்கொண்டிருந்தார்....ஐரோப்பிய புரட்சிக்காரர்களுக்குள்ளே தொடர்பு அறுந்து போகாமலிருப்பதற்காகத்தான் அவர் இப்படி சுழல் சுற்றுப் பயணம் புரிந்தபடி இருந்தார்.

மார்க்ஸ் அஞ்சியபடியே புரட்சிப் படையினருக்குள்ளே புல்லர்கள் தோன்ற ஆரம்பித்தனர். அந்த நேரம் பார்த்து துண்டு துண்டாகப் பிரிந்து கிடந்த முடிமன்னர்களுக்கு ஆதரவு தர முன் வந்தான் ரஷ்ய சர்வாதிகாரி ஜார். ஜார் தந்தனுப்பிய துருப்புக்களின் உதவியால் முடி மன்னர்கள் மீண்டும் வாழ்வு பெற்றனர். 1849-ம் வருடம் செப்டம்பர் மாதம் 26-ந் தேதியோடு புரட்சிக்காரர்களின் கை சாய்ந்தது. புரட்சியை முன்னின்று நடத்திய தலைவர்கள் வெளியே உலவ முடியாத நிலை ஏற்பட்டது. மீண்டும் புதிதாகப் பதவிக்கு வந்த முடி மன்னர்கள் பழைய தர்பார் ராகத்தைத் துவக்கினர்.

மார்க்ஸ் மறைவாக லண்டன் போய்ச் சேர்ந்தார். அவர் உயிர் தப்பியதே பெரிய பாடாய்ப் போய்விட்டது. ஏஞ்சல்ஸும் மார்க்ஸோடு வந்து தங்கினார். கையிலோ பணமில்லை, வெளியே உலவி சம்பாதிக்கலாமென்றாலோ அரசாங்கத்தின் பாதுகாப்புகள் பெரிய அளவிலே பயமுறுத்திக் கொண்டிருந்தன. இந்த நிலையிலே வாழ வசதியிருந்தும் தன்னோடு ஓட்டைக் குடிசையிலே பசித்தொல்லைகளைத் தழுவிக்கொண்டு ஏஞ்சல்ஸ் வாழ்வு நடத்துவது மார்க்ஸுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே மாஞ்செஸ்டர் போய், அங்குள்ள அவரது தந்தையின் தொழிற்சாலை தங்கிவாழ வசதியுள்ளதாகையால், அதன் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ளும்படி, ஏஞ்சல்ஸை வேண்டினார். அப்படி ஏஞ்சல்ஸ் இப்போது செய்தால்தான் தனக்கும் பின்னர் அவர் உதவியளிக்க முடியுமென்பதையும் மார்க்ஸ் அவருக்குச் சுட்டிக் காட்டினார். மார்க்ஸை தனியே விட்டுப் போக மனமில்லை ஏஞ்சல்ஸுக்கு. என்றாலும் அவரின் வேண்டுகோளின்படி துயர மொழுகும் இதயத்தோடு லண்டனை விட்டுப் புறப்பட்டு மாஞ்செஸ்டரில் தனது தந்தையிடம் போய்ச் சேர்ந்தார்.

ஏஞ்சல்ஸ் பிரிந்து போனதும் வறுமைத்தேள் மார்க்ஸைப் பலமாகக் கொட்ட ஆரம்பித்தது. "நியூயார்க் டிரிபியூன்"

என்ற ஏட்டுக்கு மார்க்ஸ் கட்டுரை எழுதிவந்தார். அந்தப் பத்திராதிபர்களனுப்பிய சிறு தொகையால் தனது வாழ்க்கையை நடத்திவந்தார். 1852-ல் நடந்த கலோந் பொதுவுடமை வழக்கைப்பற்றி மார்க்ஸ் ஒரு சிறு பிரசுரம் வெளியிட எண்ணினார். அதற்கான கட்டுரைகளைத் தீட்டுவதற்குத் தேவையான காகிதம் வாங்குவதற்குக்கூட அவரிடம் பணமில்லை அவருடையே ஓரே மழைக்கோட்டை விற்றுப் பணமாக்கிப் பிறகு ஏடு தீட்டினாராம். வறுமை அவ்வளவு கோரத் தாண்டவமிட்டது அவரின் வாழ்க்கையிலே இந்த சமயத்திலே மார்க்ஸின் துணைவியாருக்கு மகவொன்று பிறந்தது. அந்தக் குழந்தையை, பிரான்சிஸ்கா என்ற அன்புப் பெயரால் அழைத்தார்கள் மார்க்ஸும் அவரது துணைவியரும். பிரான்சிஸ்காதான் அவர்களது ஆறாவது குழந்தை. "முன்னமே பிறந்துள்ள ஐந்து குழந்தைகளுமேதான் உயிரோடு வாழ்கின்றனவே! தான் ஒருத்தி வேறு உயிரோடு வாழ்ந்து பெற்றோரின் தொல்லையை ஏன் வளர்க்க வேண்டும்" என்று எண்ணி விட்டாளோ என்னவோ, பிரான்சிஸ்கா, தன் வாழ்வுக்கு முடிவு கூறிக்கொண்டாள். அந்த சின்னஞ் சிறு குழந்தை பிரான்சிஸ்கா இறந்த போது அதைச் சுடலைக்கு எடுத்துச் செல்ல சவப்பெட்டிவாங்க மார்க்ஸிடம் காசு இல்லை என்றால் அந்தத் தூயவரின் நிலை எந்த அளவிலே இருந்திருக்கும் ஒரு சொட்டுக்கண்ணீர் வடித்துவிட்டு, "என் எழுத்துக் கூலி என்னை வந்தடைந்ததும் நான் திரும்பக் கொடுத்து விடுகிறேன்" எனக்கூறி நண்பர்களிடம் இரண்டு பவுன் கடன் வாங்கி...தன்னருமைப் பிரான்சிஸ்காவைப் புதை குழியிலே தள்ளி மூடினார்.

இதற்குப் பிறகு ஏஞ்சல்ஸின் தந்தையார் இறந்து விடவே அடிக்கடி பெரிய அளவிலே பணமனுப்பி உதவினார் ஏஞ்சல்ஸ். அந்த நேரத்திலே ஏஞ்சல்ஸ் உதவிபுரியாவிட்டால மார்க்ஸின் போக்கே வேறுவிதமாக மாறியிருக்கும்

தன் வாழ்க்கைக்குப் போதிய பணம் நண்பரிடமிருந்து வந்தடையவே மார்க்ஸ் தன் ஆராய்ச்சித் திறனைப் பெருக்க எண்ணினார். "காபிடல்" என்ற தனது முற்றுப்பெறாத நூலை முடிக்கும் பணியிலே இறங்கினார். பொருளாதாரத்தைப் பற்றிப் பல விரிவான ஏடுகள் தீட்டினார் ரஷிய மொழியைப் பயின்று அந்த நாட்டின் விவசாய முறைகளைப்பற்றி விரிவாக ஆராய்ச்சி நடத்தினார்.

வயது ஆக ஆக ஓய்வின்றி ஆராய்ச்சியிலேயே மூழ்கியதினால் அவரது உடல் நிலை கெட்டுக்கொண்டு வந்தது. ஒரு நாள் எப்பொழுதும் போலத் தன் அறையிலே அமர்ந்து ஏதோ புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்த மார்க்ஸ்..... மாரடைப்பால் மாண்டுவிட்டார், அப்போது அவரின் வயது 65.

ஏஞ்சல்ஸ் ஓடோடி வந்தார் மார்க்ஸின் மரணச்செய்தி செய்திகேட்டு! உலகின் ஆராய்ச்சிக் கருவூலம், எழுத்துலகச் சிற்பி, புரட்சி தந்த தந்தை.... மீளாத துக்கத்திலே உலகை ஆழ்த்திவிட்டுப்போய்விட்டாரே என்று கூறி ஏஞ்சல்ஸ் கண்ணீர் விட்டார்.

அவர் விட்ட உண்மைக் கண்ணீரைப் போலவே அன்று கண்ணீர் வடிக்காவிட்டாலும் இன்று உலக மாந்தர் அனைவருமே கண்ணீர் விடுகின்றனர்.... தொல்லை தாங்கிக்கொண்டு பணியாற்றிய மாவீரன் மார்க்ஸுக்காக!

ஐயப்பன் ஊர்வலம்

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

அருமைத் தங்கையின் உயிரைப் போக்கிய உலுத்தனே! கொலைபாதகனே! ஏண்டா பேசாமல் நிற்கிறாய்?......நடத்து உன் வேலையை உன் துப்பாக்கி குண்டு என் மார்பிலும் பாயட்டும்!......நானும் என் அருமைத் தங்கையுடன் இந்த உலகிடம் விடைபெற்றுக் கொள்ளுகிறேன்!......ம......ஏன் தயங்குகிறாய்?......ஏ கொலைபாதகா!......நடத்தடா உன் வேலையை!......

கொலைகாரனை நெருங்கிக் கொண்டிருந்தான் குரிசில்.

"டமார்!"

துப்பாக்கிக் குண்டு, கட்டிளங் காளையின் பரந்த மார்பைத் துளைத்தது. செந்நீர் வடித்தான் சென்னி! தரையில் விழுந்தான்! மங்களாவைப் பின்தொடர்ந்தான்!......

"நண்பா! என் நெஞ்சம் நெகிழ்ந்து விட்டது; சிந்தனை கலங்கி விட்டது!......நண்பா.....ஐயப்பன் உண்மையிலேயே ஒரு பகுத்தறிவுவாதி! தியாகி!......"

"ஆமாம். பகுத்தறிவுவாதிகள் பெறும் பெரும் பரிசையும் பெற்றுவிட்டான்!......நண்பா!....என்ன?.........உன் நேத்திரங்களிலிருந்து நீர் இப்படி வடிகிறதே!......அழாதே தோழா!........உலகத்தைத் தெரிந்துகொள் ஐயப்பன் வரலாற்றின் மூலம்! அதோ மேளச்சத்தம் கேட்கிறது! ஐயப்பன் இறுதி ஊர்வலம் வருகிறான். எழுந்திரு நண்பா!......வா வீதிக்குச் செல்லுவோம்! வா!......வாப்பா சாமி!......"

இருவரும் வீதிக்கு ஓடிவந்து ஊர்வலத்திலே கலந்து கொண்டார்கள். கண்ணீர் விட்டுக் கதறிக்கொண்டிருந்த காளைகளையும், காரிகைகளையும், பெரியோரையும், சிறுவர்களையுங்கொண்ட அந்த மாபெரும் ஊர்வலம் இடுகாடு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

"தூங்குதல் போன்றது சாக்காடு—பின்னர்த் தூங்கி விழித்தல் எப்பிறப்பு!......"

"வாழ்க ஐயப்பன்!"

"வளர்க பகுத்தறிவு!"

எழுச்சிக் குரல்களும் வாழ்த்தொலிகளும் வானைப் பிளந்தன!

இந்நாடு வீழின், எந்நாடு வாழும்?

[தே. பா. சம்பந்தன்.]

'அவனுக்கு ஒரு கால் நொண்டியாயிற்றே, அவனா இல்லறம் நடத்துவான்' என்று பெண் பார்க்க வந்தவர்கள் கூறினால் அதை நாம் தவறு என்று கூறமாட்டோம்!

'முடவனாக இருக்கிறான் எனவே அவன் இல்லறத்திற்கு லாயக் கற்றவன்' என்று தீர்ப்பு வழங்கப்பட்டால் நாம் திகைக்க மாட்டோம்!

'கண்ணிரண்டும் அணைந்த அந்தகன். அவனால் இல்லறம் நடத்த இயலுமா? இதென்ன விபரீத ஆசை! ஆனாலும் புத்தி இப்படியா கெட வேண்டும்!' என்று கேலி பேசப்பட்டால் கூட நாம் எதிர்த்துப் பேசமாட்டோம்!

அந்தகன் அல்ல; கண்ணொளி உள்ளவன். ஆனாலும் இல்லறத்திற்குத் தகுதியற்றவனாம்.

வயோதிகன் அல்ல; வாலிபன். ஆனாலும் இல்லறத்திற்கு லாயக்கற்றவனாம்.

சோம்பேறியோ வீணனோ கூட அல்ல; நல்ல உழைப்பாளி. ஆனாலும் இல்லறம் அவனுக்குப் பொருந்தாதாம்.

நோயாளியல்ல, குரூபியுமல்ல, படிக்காதவனும் கூட அல்ல. ஆனாலும் அவனால் இல்லறம் நடத்த முடியாதாம்.

'அப்படியா கூறினார்கள். அவர்கள் தீர்ப்பிலிருந்தே அவர்கள் தெளிவற்றவர்கள் என்பது தெளிவாகிறதே' என்று நீங்கள் கூறுவீர்கள். ஆம் நண்பர்களே, தெளிவற்றவர்கள்தான் அவர்கள். இல்லாவிட்டால் முன்பின் யோசியாமல் திராவிடம் தனித்தால் வாழாது என்று ஏன் கூறுகிறார்கள்? எப்படிக் கூறமுடியும்?

திராவிடம் தனித்தால் வாழ முடியாதாம். திட்டவட்டமாகக் கூறிவிட்டனர். "உம்முடைய இத் தீர்மானத்திற்கு எது ஆதாரம்" என்று தயவு செய்து அவர்களைக் கேட்டு விடாதீர்கள்.

ஏசு கூறினார், கேள் கொடுக்கப்படும் என்று. அது கூடத் தவறு என்றுதான் நான் நினைக்கிறேன். ஏனென்றால் 'கேள், இருந்தால் கொடுக்கப்படும்' என்பதாகத்தானிருக்க வேண்டும்.

* * *

இங்கிலாந்தின் மொத்த ஜனத்தொகையில் 47·2 சதவிகிதம் தொழில் துறைகளிலும், 8 சதவிகிதம் விவசாயத்திலும் ஈடுபடுகின்றனர்.

அமெரிக்காவில் 31·7 சதவிகிதம் தொழில் துறைகளிலும், 28 சதவிகிதம் விவசாயத்திலும் ஈடுபடுகின்றனர். ஆனால் ஐந்து கோடி மக்களைக் கொண்ட சென்னை இராஜ்ஜியத்தில் 10 சதவிகிதம் பேர்தான் தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ளனர்.

ஒவ்வொரு நாடும் தொழிற்சாலைகளையும், விவசாயத்தையும் குறிப்பிட்ட விகிதத்தில் அமைத்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் விவசாயம் ஒன்றையே நம்பி எந்த நாடும் பிழைக்க முடியாது. நாளுக்கு நாள் குறைந்த பலன் தரும் விவசாயம் மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யாது என்பது மட்டுமல்ல, தொழில் துறைகளைப் போல மக்கள் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தாது. எனவே தொழிற்துறையை நாட்டின் நல்வாழ்வின் திறவுகோல் என்று கருதவேண்டியிருக்கிறது. பம்பாய் வங்காளம், பீஹார் போன்ற வடக்கித்திய இராஜ்ஜியங்கள் தொழில் துறையில் முன்னணியில் வைக்கப்பட்டுள்ளன. நாம் பின்னணியில் விவசாயம் ஒன்றையே நம்பி வாழவேண்டியவர்களாக ஆக்கப்பட்டுவிட்டோம்.

இந்தியாவில் உள்ள 417 பருத்தி மில்களில் 67 மில்கள்தான் சென்னையில் உள்ளன.

இந்தியாவில் உள்ள 98 பட்டு மில்களில் 7 மில்கள்தான் சென்னையில் உள்ளன.

இந்தியாவில் உள்ள 15 இரும்பு எஃகு தொழிற்சாலைகளில் 2 தான் சென்னையில் உள்ளன.

இந்தியாவில் உள்ள 1135 அரிசி மில்களில் 401 மில்கள்தான் சென்னையில் உள்ளன.

இந்தியாவில் உள்ள 80 புகையிலை தொழிற்சாலைகளில் 11 தான் சென்னையில் உள்ளன.

இந்தியாவில் உள்ள 275 எண்ணெய் ஆலைகளில் 10 ஆலைகள்தான் சென்னையில் உள்ளன.

புள்ளிவிவரங்கள் பேசும் பொம்மைகள். அவைகள் எடுத்துக்காட்டும் வடக்கு உயர,

(11-ம் பக்கம் பார்க்க)

தொடர் நாடகம்.

திலோத்தமா

(கு. தனபாலன்.)

அங்கம் 10

இடம்: வீதி.

[புது ஒளி பிரயாணக்கோலத்துடன் போகிறான். அவனது நண்பர்கள் வேதாந்தமும், வைதீகமும் அவனை அழைக்கின்றனர்.—திரும்பி வருகிறான்...]

வைதீ: கட்டாயம் வரவேண்டும்......இல்லென்னு கெட்ட கோவம் வரும் தெரியுமா? இந்த தரம் பஜனையை நாம்ப நல்லா நடத்திக் காட்டணும்! போனமுறை மாதிரி இல்லாமல்.

வேதா: அப்படியே நடத்திட்டா போவுது......அதோ போறது யாரு பாரு......நம்ம புது ஒளி மாதிரி இல்லே?

வைதீ: மாதிரி என்ன.... சாட்சாத் அவனேதான்...... அண்ணே....அண்ணே......[புது ஒளி திரும்பிப் பார்த்தல்] இப்படி கொஞ்சம் வந்திட்டு போ அண்ணே....!

பு. ஒ: [வந்துகொண்டே] ஏண்டா, எதுக்கு?

வே: செத்தவா, அண்ணே இப்படி!

பு. ஒ: ஏன்...என்ன விஷயம்?

வேதா: இதென்ன அண்ணே அனியாயம். என்னதான் நெனைச்சிகிட்டிருக்காங்க அவுங்க?...அடக்கம், ஒடுக்கம் அச்சம் ஏதாவது இருக்கா...? அல்லது மனசாட்சி இன்னு ஏதாவது ஒண்ணு இருந்தா இந்த காரியத்தை இப்படி செய்வாங்களா? வெளிநாட்டான் யாராவது கேட்டா என்ன கேலி பண்ணுவான்? மனசாட்சிக்கி மதிப்பே இல்லே போலிருக்கு!

பு ஒ: டே....டெ...டெ..... என்னடா இது? மனசாட்சியாவது, மண்ணாங்கட்டியாவது யாரைப்பத்திப்பா சொல்றே நீ?

வேதா: யாரைப்பத்திதான் ஊருபூரா சிரிப்பா சிரிக்குது?

பு. ஒ: அட, இவன் யார்ரா ஒருத்தன்....டேய், நான் நேரா எங்க மாமியா வீட்டிலே 1-மாசமா இருந்துபிட்டு இப்பத்தானேடா ஊருக்கு வந்துகிட்டிருக்கேன்!

வைதீ: அப்'பெ......மகாராஜா செத்துபோனதுகூட உனக்குத் தெரியாதா?

பு. ஒ: (திடுக்கிட்டு) என்ன ...என்ன! என்ன சொன்னே நீ...மகாராஜா செத்துப்பூட்டாரா! ஏண்டா நீ நிசமாத் தானு சொல்றே?

வைதீ: பின்னே பொய்யா சொல்றேம்?

பு. ஒ: ஐயோ கஷ்டகாலமே!...அட ஆண்டவனே... நல்லவங்களை இந்த ஊரிலேயே விட்டுவைக்க பிரியமில்லையா? ஹும்...வராத விபத்தெல்லாம் இந்த நாட்டுக்குத்தானு வந்து தொலையணும்...அப்புறம்?

[ஓர் கிழவர் இவர்களது உரையாடலில் கலந்துகொள்கிறார்]

கிழ: அப்புறமென்ன...பதி இறந்த பத்தாவதுநாளே, மகாராணி மகுடம் சூட்டிக்கிட்டாங்க. பேருக்குதான் மகாராணி ஆட்சி. ஆனு உண்மையிலே யார் அரசாட்சி செய்யிரா தெரியுமா?

பு. ஒ: வேறு யாருதான் இருக்காங்க...அரசியல் அதிகாரமும், வர்ணாஸ்ரமமும், கலந்த மதுவை அருந்தி அளவுமீறிய போதையிலே அட்டகாசம் செய்ய அந்த ராஜகுருவைத் தவிர வேறு யாரய்யா இருக்கப் போறாங்க? நாட்டு மக்களை ஆட்டுகுட்டிங்கன்னு நெனைச்சிகிட்டிருக்கான் அந்த நரிப்பய! அட ஆண்டவனே! இதுக்கு எப்பத்தான் நல்ல முடிவு வருமோ தெரியவில்லையே!

[ராஜகுருவின் சீடன் சிராளன் மறைந்து கவனித்தல்.]

கிழ: இனி கவலையே வேண்டாம் தம்பி. மக்கள் தொண்டன்...நம்ம அருணன் இருக்கிறாரே அவர் இதுக்கு தகுந்த நடவடிக்கை, எடுக்கப்போறாரு வெகு சீக்கிரத்திலேயே! அ[illegible] ரது சவுக்குக்கு இனி நல்ல வேலை இருக்கும்!

பு. ஒ: அப்படியா?

இ: சந்தேகமே வேண்டாம்!

வைதீ: என்ன இருந்தாலும், நம்ம மகாராணி இப்படி நம்பிடக்கூடாது அந்த ராஜ குருவை!

வேதா: ரொம்ப பதட்டமான செயலிது!

பு. ஒ: அடா நீ ஒரு பைத்தியம். பதட்டமாவது, இதட்டமாவது......பதவியப்பா, பதவி! அதை அடைய அந்த ஆண்டவனைகூட தலைகிழா மாத்தி வச்சிடுவாங்க இந்த நாட்டிலே உள்ள புண்ணியவானுங்க!

கிழ: ஆமாம் தம்பி. நீ ஒண்ணுசொன்னாலும் நறுக்குன்னு பாக்குவெட்டியிலிருந்து பாக்கு தெறிக்கிறாப்போல சொல்றே!

வேதா: அண்ணே! பெரிய எடத்து சமாசாரம் நமக்கெதுக்கு? அவுங்க பெரியவங்க ......என்ன வேண்டுமானாலும் செய்யலாம்....யார் இருக்காங்க கேக்கிறதுக்கு!

கிழ: அப்படி சொல்லிடாதே தம்பி...அவுங்க பெரியவங்களானது யாராலே? எல்லாம் நம்மாலேதானே! அவுங்க தன்னாலே பெரியவங்களா பொறந்திட்டாங்களா என்ன? பெரியவங்க சரிவா அரசாட்சி செய்யலேன்னா அந்த ஆட்சியை மக்கள் மாத்தி அமைக்க உரிமை கட்டாயம் உண்டு தெரியுமா?

வைதீ. (வேதாந்தத்திடம்) அண்ணே நமக்கெதுக்கு வீண் வம்பு. யாருக்காவது இந்த சேதி எட்டினா...அத்தோடா ராம்ப எல்லாம் அரசாங்க விருந்தாளியா போக வேண்டியது தான்!

பு ஓ: நல்ல தொடை நடுங்கிகளடா நீங்க!

வைதீ: அண்ணே, அது போகட்டும் நீயும் இந்த வருஷம் பஜனையிலே கலந்துக்கணும்.

பு. ஓ: டே, போடா போடா டப்பய மவனே...நாடு இருக்கிற நிலைமையை கவனிக்க காணோம்...பஜனையாம் பஜனை!

[புது ஒளி ஒரு புறமாகவும், வேதாந்தமும், வைதிகமும் வேறுபுறமாகவும் போகிறார்கள். சீராளன் முகத்தைச் சுளித்துக் கொண்டு போகிறான். கிழ வேடத்தில் இருந்த அருணன் மனம் நாட்டின் சீர்கேட்டைப் பற்றி எண்ணமிடுகின்றது. அவனது வாய் பின் வருமாறு மொழிகின்றது...]

அரு: ஹும்...நாடு எந்த நைய சீர்கேட்டிற்கு வந்து விட்டது. வாயில்லாப் பூச்சிகளான பாமரமக்களைக் கசக்கிப் பிழிந்து தன் சுகபோக வாழ்விற்கு—தன்னினத்தாரின் நல்வாழ்விற்கு வழிவகை தேடி கொண்டான் அந்த ராஜகுரு. இருக்கட்டும். ......அவனது கொட்டத்தை அடக்கி விடுகிறேன். மந்திரி மணிவேலர் சொன்னபடி அரசனைக் கொன்றிருந்தால் ஒன்று இவன் கொன்றிருக்கவேண்டும். அல்லது எந்த விபீஷணனாவது அந்த வேலையைச் செய்திருக்க வேண்டும்.. அதைக் கண்டுபிடிக்காமல் கண்ணுறங்க மாட்டேன் அக்கிரமக்காரர்களின் அதிகார, ஆணவ, அகம்பாவ, அயோக்கியச் செய்கைகளுக்குச்சாவுமணி அடிக்கும் நாள் நெருங்கி விட்டது என்பதை அவன் அறியும் படி செய்கின்றேன். இக்காரியத்தைக் கவனிக்காது இனியும் விட்டுவைப்பது மகா ஆபத்து!

அங்கம் 11

இடம்: ராஜகுருவின் அரண்மனை.

[நடனம் நடக்கின்றது—நடுவில் சீராளன் ஓடிவருகிறான்—நடனம் நிறுத்தப்படுகின்றது—நாட்டிய மாதர் சென்ற பின்பு......]

சீரா: இக்காரியத்தைக் கவனிக்காது இனியும் விட்டுவைப்பது மகா ஆபத்து!

ஆல: (கோபமாக) டேய் மண்டு! என்னடா இது அபசகுன அலறல்?

சீ: ஆம் ஸ்வாமி....அபசகுனங்கள் அதிகம் ஆயிட்டா இந்த நாட்டிலே!

ஆல: என்னடா சொல்றே?

சீ: குருதேவா! பதி இறந்த பத்தாம்நாளே மகாராணி மகுடம் சூட்டிண்டது மிகவும் வெட்கக் கேடென்றும், தங்களுக்கு அதிகார போதை தெளிய மக்கள் தொண்டனின் சவுக்கடி சீக்கிரமே உங்களுக்கு விழும், அப்படி இப்படின்னு என்னென்னமோ நம்பளவாளைப்பத்தி அந்த வீணர்கள் பேத்திண்டிருக்கா!

ஆல: சீ, அறிவிலியே....... வெட்கமில்லை இதை என்னிடம் சொல்ல?

சீ: ஏன் சுவாமி?

ஆ: ஏண்டா மண்டூகமே....... அவர்கள் அப்படி பேசும்போது நீ என்னடா செய்துகொண்டிருந்தாய், சோற்றுத்துருத்தியே ...அந்த புழுக்களை அப்படியே நசுக்கிவிட வேண்டாமா?

சீ: ஸ்வாமி, என்னால் அதெப்படி சாத்தியமாகும்?

ஆ: ஏன் முடியாது? பேதையே...!

சீ: நம்ம வர்க்கத்தினரின் அழியாத பட்டம் அதுதானே குருதேவா!

ஆ: சீ.... அறிவிலியே........ (குழப்பமுடன் உலவுகின்றான் ...பின்பு....) ஹும்...... மக்கள் தொண்டன்...மடையன்...மண் புழு அவன் என்கையில் கிட்டினால்....?

சீ: அது எட்டாக்கனி, குருதேவா!

ஆ: போடா மண்டு... எட்டாக்கனியாய் இருந்தால் என்னடா? எட்டிப் பறிக்க முடியாவிட்டால் வெட்டி விடுவது மாத்தையே!

சீ: அப்படியென்றால்...?

ஆ: மக்கள் தொண்டனின் தகப்பனைத் தொலைத்துவிடுவது ......பின்பு....?

சீ: குருதேவா, இது பலிக்காத முயற்சி மட்டுமல்ல அனுவசியமான ஆராய்ச்சியுங்கூட!

ஆ: முட்டாளே...மனமுண்டானால் மார்க்கமுண்டு...!

சீ: எப்படி குருதேவா?

ஆல: ஆம்...என் சாணக்கிய தந்திர வலையில் சிக்காத பூச்சிகளை கிடையாது இப்பூவுலகில். இவன் மட்டும் எப்படி விலக்காகிவிட முடியும்? சீராளா...நான் சொல்வதை கவனமாய்க் கேள்.

[திலோத்தமா புன்முறுவலுடன் வருகிறாள்]

யாரது? திலோத்தமாவா...? குழந்தாய்...வா......நீயும் நல்ல சமயத்தில்தான் வந்தாய்.

சீ: என்னப்பா......எந்தக் கோட்டையைப் பிடிக்க இவ்வளவு யோசனை?

ஆ: சொல்கிறேன்......இப்படி அமரு....நன்றாகக்கவனியுங்கள். நானோர் கிழவன்.......?

இருவரும்: [ஆச்சரியமுடன்] என்ன...?

ஆ: முற்றும் கேளுங்கள்.... திலோத்தமா என் பேத்தி...நீ அவளின் மாமா!

தி: இதென்னப்பா நாடகம் ஏதாவது அரண்மனையில் நடத்தப்போகின்றீர்களா?

ஆ: ஆம் நாடகம்தான்... கருத்து செறிந்த நாடகம்! கவர்ச்சிமிக்க நாடகம். பயனுள்ள நாடகம் நடத்தப்போகிறேன் ஆனால் அரண்மனைக்கு வெளியில்!

தி: என்ன? அரண்மனைக்கு வெளியிலா...? நீங்கள் சொல்வதொன்றும் விளங்கவில்லையே!

சீரா: ஹூம்...ம்...ம்...... தெரிஞ்சிண்டேன்...தெரிஞ்சிண்டேன்!

ஆ: டேய் பித்துகுளி...... என்னடா தெரிந்துகெண்டாய்?

சீ: நம்ம திலோத்தமா அழகில் அப்சரஸ். மதுவைவிடப் போதையூட்டும் அழகுள்ளவள். இவளைக்கொண்டு பொதுநலத் தொண்டனுக்குப் பொறிவைக்கப்போறேள்!

ஆ: (சிரித்துக்கொண்டே) அட, தேவலையே...உன்தலையிலும் கொஞ்சம் மூளை இருக்கிறதே!

தி: அப்பா...எனக்கு இந்த யோசனை அவ்வளவு பிடித்தமானதாகத் தோன்றவில்லை. இது நடக்குமென்று நான் நினைக்கவில்லை!

ஆல: ரம்பா...என் எண்ணம் தோல்வியின் திசையை எட்டிக்கூடப் பார்த்ததில்லை இதுவரை!

தி: ஒருவேளை இனிமேல் அப்படி நேர்ந்து விட்டால்...?

ஆ: [கேலிச்சிரிப்பு] பேதமை திலோத்தமா....... பேதமை! குமாரீ, நீ குழந்தை. உலகம் அறியாதவள். ஒருகால் நீ இந்த உலகத்தை அறிந்திருந்தாலும்....உன்தகப்பனான என்னைப்பற்றி அவ்வளவாக அறிந்திருக்க மாட்டாய் சுருக்கமாகச் சொல்கின்றேன் கேள். வெறும் ஆலவாயனாய்—அனாதையைப் போலத் தெருக்களில் சுற்றி அலைந்துகொண்டிருந்த நான் இந்த நிலையை அடைவதற்கு உறு துணையாய் இருந்தது எது தெரியுமா: [தன் தலையைச் சுட்டிக்காட்டி] இதில் அடங்கியுள்ள அற்புத யோசனைகள் தாம்! நான் நினைத்தால் யாரை வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் அரசனாக்க முடியும். நான் ஆசைப்பட்டால் இந்த முல்லை நாட்டு மகுடம் மட்டுமல்ல — எந்த நாட்டு மகுடமும் என் தலையில் பிரகாசிக்கும். இது எவரும் நம்ப முடியாத உண்மை! நான் பிறந்தது எதையும் எளிதில் நம்பி ஏமாந்துபோய் ஆட்டு மந்தைகளைப்போல் வாழ்க்கை நடத்தும் வடநாட்டிலல்ல! அறிவின் இருப்பிடம்...ஆண்மையின் பிறப்பிடம்....ஆற்றலின் இயற்கைத் தோற்றமாகிய தென்னாட்டில் பிறந்தேன். பிழைப்புக்காக மந்திர தந்திரங்களைக் கற்றேன். இந்தப் பாரத பூமியெங்கும் சுற்றினேன். புகழ் பெற்றேன். ஜகமெங்கும் புகழ்பெற்ற ஜகன்னாத ஸ்வாமிகள் எனப் போற்றப்படும் பாஞ்சால சக்ரவர்த்தியின் ராஜகுருகூட என்னுடைய சீடன்தான்! குழந்தாய்! என் திட்டம் பட்டுப்போனதே கிடையாது. என் விருப்பத்திற்கு மாறாக, குறுக்கே எவர் நின்றாலும் அவரது வம்சமே நிர்மூலமாகிவிடும். என்னால் எவரெவர் என்னென்ன கதியை அடைந்தார் என்பதைச் சொன்னால் ஒரு பெரிய பாரதமே எழுதிவிடலாம்! ஓய்வு நேரங்களில் நான் அதைப்பற்றிச் சொல்கிறேன்... அதிருக்கட்டும்.......இப்போது சொல், என் திட்டம் நிறைவேறுமா, நிறைவேறாதா என்று...!

தி: அப்பா! உங்களது பிரதாபம் பிரமாதம்தான்! அதை நான் குறைகூறவில்லை. நான் விசாரித்தறிந்தவரையில் அந்த அருணன் என்பார் எந்தக் கன்னிகையரையும் ஏறெடுத்துப் பார்க்காத உத்தமர். அப்பேர்ப்பட்டவர் பரத்தையர் வீட்டுக் கழைத்தால் வந்துவிடுவாரென்று எண்ணுகின்றீர்?

ஆ: அவன் என்ன ஸ்ரீராமனோ?

தி: அவரைவிட அருணன் ஒருபடி உயர்ந்தவரென்று நான்மட்டும் சொல்லவில்லை.... இந்த முல்லை நாட்டின் மூலை முடுக்குகளிலுள்ள எந்தப் பிராணியைக் கேட்டாலும் சொல்

(12-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை :

ஐயப்பன் ஊர்வலம்

[வேலை வில்லவன்]

ஊரெங்கும் ஒரே பரபரப்பு. மக்களின் பேச்சிலே விறுவிறுப்பு; துடிதுடிப்பு! எங்கும் ஐய்யப்பனைப் பற்றியே பேச்சு! ஊர்வலத்துக்கான ஏற்பாடுகள் காலையிலிருந்தே ஆரம்பமாகி விட்டன.

மாலை 4 மணிக்கு ஊர்வலம் புறப்பட்டது. பிரம்மாண்டமான ஊர்வலம். இலட்சக் கணக்கான மக்கள். அவ்வளவு பேரிடையேயும் கட்டுப்பாடு, ஒழுங்கு, அமைதி! ஊர்வலத்தின் முதல் வரிசைகளில் வாத்தியக்காரர்கள். அவர்களையடுத்து எஃகு உள்ளம் படைத்த எதிர்கால ஆக்க இளைஞர்கள் ஊர்வலத்தின் மத்தியிலே ஐயப்பன், அவனுக்கு முன்னும் பின்னும் மாவீரர்கள்! தொண்டர்கள்! இருமருங்கிலும் போலீஸ்காரர்கள்! ஊர்வலம் ஆமை நகருவதைப் போல் நகர்ந்து கொண்டிருந்தது. எழுச்சிக் குரல்களும் வாழ்த்தொலிகளும் விண்ணைப் பிளந்தன!

* * *

"சாமி, சரணம்!"

"வாப்பா வேலு!"

"எம்பா சாமி, ஊர்வலத்துக்கு வாலியா?......"

"வர்ரேம்பா!......இன்னும் வெகுநேரம் செல்லுமில்லே, ஊர்வலம் நம்ம வீதியிலே வரதுக்கு!......"

"ஆமா,"

"அப்போ வீட்டுக்குள்ளே வாயேன். பேசிக்கிட்டிருப்போம்!......வாப்பா வேலு!... சங்கோஜிதப்படாதே!........."

வேலுவை அந்தப் பங்களாவின் மச்சிலே உள்ள தன் அறைக்கு அழைத்துச் சென்றான் சாமி.

"உட்காருப்பா வேலு!..."

"இருக்கட்டும்பா!...."

"அட, நீ என்னப்பா இப்படிக் கூச்சப்படறே!.......இங்கே யாரும் வரமாட்டாங்க! இது என் ரூம்!......"

இருவரும் உட்கார்ந்து கொண்டனர்.

"ஊர்வலம் ரொம்பப் பிரமாதமாயிருக்காம்லே!......."

"ஆமாமா, ரொம்பப் பிரமாதம்!"

"ஏம்பா வேலு ஒனக்கு கதை தெரியுமோ?......"

"ஓ தெரியுமே! என்னப்பா, இது தெரியாமகூடவா இருப்பேன்!.......

"அடடே! ஒனக்குத் தெரியுமாண்ணு தெரிஞ்சுகிறதுக்குக் கேக்கலப்பா நான். முழுக் கதையும் முழுவிவரத்தோடே எனக்குத் தெரியாது. அதனாலேதான் உனக்குத் தெரிஞ்சா கேட்டுத் தெரிஞ்சிக்கிலாமுண்ணு கேட்டேன்!"

"அட, அது பெரிய கதையாச்சேப்பா!......"

"சும்மா சொல்லுப்பா!....... மணி நாலேகால் தான் ஆகுது. ஊர்வலம் இங்கே வர்ரதுக்குள்ளே மணி ஆறாகிடும்!......."

"ஐயப்பனுடைய தாய் தகப்பன் யாருண்ணு தெரியுமில்லே ஒனக்கு?......"

"என்னமோ கேள்விபட்டிருக்கேன்!—அவன் தாய் தகப்பன், பரமசிவமும், மோகனும் பானுமிண்ணு!......"

"அதைப்பற்றி பூராவிவரமும் தெரியாதா உனக்கு!"

"ஆமாம்பா. அதுக்குத்தான் ஒன்னெ சொல்லச் சொல்லிக் கேட்கிறேன்!"

"ஒரு காலம்! பரமசிவ முதலியார் நம்ம ஊரிலே பிரபல வியாபாரியாயிருந்தார். ஊராரின் அமோக ஆதரவையும் மதிப்பையும் பெற்று வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்திக் கொண்டு வந்தார். நல்ல ஒழுக்கசீலராகவுமிருந்தார் ஆனால்..........."

"யாரைக்கும் அடி சருக்கும்; காமத்திற்குக் கண்ணில்லையென்கிறாயா?"

"அதுமட்டுமல்ல மோகனும் பானின் மோகன சுந்தர வதனத்திற்கும் ஒரு வாம்பில்லாமற் போய்விட்டது. அவள் அவர் வீட்டு வேலைக்காரிதான். ஆனால் அவள் இயற்கையழகும், வாலிப வயதிலே கணவனையிழந்து விதவையாகி, வாலிப விருந்தை உண்ண வாய்ப்பில்லாமலிருந்த அவள் பொன்னிற மேனியும், பவ்வனமும் பரமசிவ முதலியா

ரின் கண்களைக் கவர்ந்தன. கருத்தைக் கலக்கின. காரிகையின் மீது காதல் வலை வீசத் துடித்துக்கொண்டிருந்தார். ஒரு நாள் இரவு. மையிருட்டு. மோகனா குடிசையினுள் தன் குருட்டுக் கிழத்தகப்பனுடன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். பட்டு வேட்டி; சில்க் ஜிப்பா; விசிறி மடிப்புக் கலையாத அங்கவஸ்திரத்துடன் குடிசைக்கு வந்தார் முதலியார். டார்ச் லைட்டைப் போட்டார் குடிசையினுள். அவர் விரல்களிலிருந்த வைர மோதிரங்கள் டார்ச் லைட்டுடன் போட்டி போட்டுக் கொண்டு ஒளி வீசின. அப்பொழுது——

2

"மோகனா!......"

"யாரு மொதலியாரா?......"

"ஆமாம். இங்கேவாயேன். ஒரு விஷயம்!"—இந்தப் பேச்சிலே காமம் கூத்தாடிற்று. நங்கை நடுங்கினாள். அவள் உடல் வெடவெடுத்தது முத்துமுத்தாக வியர்வை அவள் முகத்திலே காணப்பட்டது.

"மோகனா!......."—மோகம் வழிந்தது இந்தக்குரலிலே. முதலியார் அவளை நெருங்கினார். மங்கை மிரண்டாள். காரிகையின் கரங்களைப் பற்றினார் குரிசில். கோதை கதறவில்லை!....... எங்கோபோய் ஒளிந்துகொண்டிருந்த அவள் உணர்ச்சிகள் அவளைப்பற்றிக்கொண்டன முதலியாரின் மோகத்தையும் மோகனரூபத்தையுங்கண்டதும்!

முதலியார் மங்கையின் கரங்களைப் பற்றிக்கொண்டு முன் சென்றார். பாவை பின்சென்றாள். மாந்தோப்பையடைந்தார்கள் முதலியாரும், மோகனாவும்! ....முதலியார் அணங்கை அணைத்துக்கொண்டார். தையலைத் தழுவினார். தயங்கின அவளைத் தைரியப்படுத்தித் தேற்றினார், "கண்ணே! கலங்காதே! பொற்பதுமையே! பயப்படாதே! நானுன்னைக் கைவிடமாட்டேன்!" என்று! ஆறுதலும் ஆனந்தமுமடைந்தாள் அணங்கு. பசியைத் தீர்த்துக் கொண்டார் பரமசிவனார்!—தீர்த்துக்கொண்டே வந்தார். சிற்றிடையாளும் செந்தேனைச் சுவைத்துக்கொண்டே வந்தாள். நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன.

* * * *

"இப்படியாப்பா அந்தக் கதை ஆரம்பிக்கிறது?......அப்படிச் சொல்லு!"—உம் கொட்டாமலேயிருந்த சாமிபேசினான்.

"ஆமாப்பா! இதுதான் உண்மைக்கதை!.......பூராக்கதையையுங் கேளுப்பா!..............

எங்கேவிட்டேன்?.....ம்.... இப்படியாகப் பரமசிவ முதலியாரும் மோகனாம்பாளும் மன்மதனும் ரதியுமாக, நள்ளிரவுகளை நல்லிரவுகளாகக் கழித்து வந்தார்கள். திடீரென்று ஒரு நாள்——

3

"வீணாக என்னை வேதனைப் படுத்தாதே மோகனா!......"

"நான் வேதனையா படுத்துகிறேன்?...இல்லை. நீங்கள் வாக்குத் தவறுவதை நினைவூட்டுகிறேன்!"

"மரியாதையாகப் போய்விடு! ......இல்லாவிடில்......"

"அப்புறம் என்கதி?"

"அப்புறம் உன்கதி அதோகதியாகப் போகக் கூடாதென்பதற்காக வேண்டுமானால் பணம் தருகிறேன் வாங்கிக்கொள்!..."

"உங்கள் பணமும் உங்கள் குணத்தைப் போல்தானிருக்கும்!......காமப்பசியைத் தீர்த்துக்கொண்டதும், நான் கருத்தரித்ததும் கருப்பட்டி!...... அதற்கு முன் கற்கண்டு! ...அப்பொழுது வைடூரியம், இப்பொழுது வேம்பு!......"

"வம்பளப்பு வேண்டாம்!... உலகமறியாமல் உரையாடாதே! ......இந்தா, உனக்கு எவ்வளவு பணம் வேண்டுமானாலுங்கேள்! ....வாங்கிக்கொண்டு இந்த ஊரைவிட்டு வேறெங்காவது போய்ப் பிழைத்துக்கொள்!...."

"பணம்!......என் கற்பின் மதிப்பை ஈடுகட்டும் கருவி!...... நீர் செய்த குற்றத்தை மறைக்க எனக்குச்செலுத்தும் கையூட்டு! (இலஞ்சம்)......"

"ஏய் மூதி! வீணாக வாயாடி என் வேதனையைக் கிளப்பாதே! அப்புறம் உன்னைக் கர்ப்பிணி என்றும் பாராமல் வேலைக்காரர்களைவிட்டு நையப்புடைத்துவிடச் சொல்லுவேன்!....ஆமா நான் இனி பொறுக்கமாட்டேன். மரியாதையா எவ்வளவு பணம் வேண்டுமோ கேட்டு வாங்கிகிட்டுப் போயிடு!...."

"எனக்குப் பணம் வேண்டாம்!....நான் போகிறேன்!... நீங்களும் கைவிட்டுவிட்டீர்கள். என் தந்தையும் என்னை விட்டுப் பிரிந்தார். இனி நான் அநாதை......ஆம் எங்காவது போய்ச் சாகிறேன்!..."

* * *

"அப்புறம் பணம் வாங்கிக் கொள்ளாமலேயே மோகனா போய்விட்டாளா?..."

"ஆமாப்பா! சாமி!....துரத்தப்பட்டாள் துடியிடையாள் துஷ்டனால்!"

"அப்புறம்...."

"அப்புறம்,......ம்.......அந்த ஊரைவிட்டே வெளியேறிவிட்டாள் மோகனா. ஊராரின் வசைச் சொற்களைக் கேட்டுச் சகிக்கமுடியவில்லை அவளால்!... நடந்தே பக்கத்து ஊரையடைந்தாள்!—ஒரு காட்டுப் பாதையின் வழியாக! அந்த ஊரிலே

(18ம் பக்கம் பார்க்க)

இந்நாடு வீழின், எந்நாடு வாழும்?

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தெற்கு தாழ்கிற தென்ற உண்மையை.

'ஏடா மூடா, வீணாக மத்திய சர்க்காரைக் குறை கூறாதே. விநாச காலம். எனவேதான் உனக்கு இந்த விபரீத புத்தி ஏற்படுகிறது. மத்திய சர்க்கார் மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடக்கிறதென்று குற்றம் கூறுகிறாயே, அது முழுக்க முழுக்கத் தவறு. வடக்கே தொழில் வளருகிறதென்றால் அங்கே தொழிற்சாலைகள் அமைக்க வசதிகள் இருக்கின்றன. இங்கே என்ன இருக்கிறது. பொறாமை காரணமாகத் தகாததைக் கூறாதே இத்துடன் நிறுத்திக்கொள் உன் விஷ வார்த்தைகளை' என்று சில நண்பர்கள் கூறலாம். அப்படிக் கூறப்பட்டால் அவர்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபம்.

திராவிடம், அவர்கள் நினைப்பது போன்று, அப்படி ஒன்றும் வகைகெட்ட, வக்கற்ற நாடாகப் போய்விடவில்லை. தொழிற்சாலைகள் அமைக்க, மூலப் பொருள்கள், வேலைசெய்வோர், இடம் பணம் ஆகிய வசதிகள் தேவை. அத்துடன் தொழிற்சாலைகள் மார்க்கெட்டிற்கு அருகாமையில் இருக்கவேண்டும். இந்த வகையில் நோக்கினால் திராவிடம் மற்றெந்த நாட்டிற்கும் 'இளைத்த' தல்ல என்பது சிந்திக்கும் எவருக்கும் விளங்கும்.

ஆமதாபாத் ஸரபை (Sarabais)களுக்கும் டெல்லி ஸ்ரீராம்களுக்கும் தென்னாட்டு 'மூளை' தான் உதவியாக உள்ளது. தன்னாட்டிற்குப் பயன்படாது வேற்று நாட்டிற்குப் பயன்படும் சூழ்நிலை இந்நாட்டு 'அறிவி'ற்கு ஏற்பட்டிருக்கிறது. ஒரு நாட்டிற்கு ஒருநாடு பணம் கொடுத்து உதவிற்று, ஆயுதம் கொடுத்து உதவிற்று, உணவு கொடுத்து உதவிற்று என்றுதான் நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் திராவிடம் தன் 'அறிவை'யே கொடுத்து உதவியிருக்கிறது.

வழங்கப்பட்ட ஜில்லாக்களில் (In Ceded Districts) பேரைட்ஸ், ஸ்டியடைட், கல்நார் போன்ற பொருள்கள் கிடைக்கின்றன. பேரைட்ஸ் வர்ணம் செய்யவும், ஸ்டியடைட் சோப்பு, காகிதம், ரப்பர் முதலியவை செய்யவும் பயன்படும் பொருள்கள். கடப்பையில் ஆண்டுதோறும் 40-டன் கிடைக்கும் கல்நார் வழங்கப்பட்ட ஜில்லாக்களில் பெருவாரியாகக் கிடைக்கிறது. சேலம், திருச்சிராப்பள்ளி, ஆர்க்காடு போன்ற பகுதிகளில் உன்னதமான இரும்பு கிடைக்கிறது. தற்போது 304,650,000 டன்கள் இரும்பு இங்கு கிடைக்கும் என்று உத்தேசமாகக் கூறப்பட்டாலும் தோண்டும்போது உத்தேசிக்கப்பட்ட அளவுக்கு மேல் 3 அல்லது 4 மடங்கு அதிகமாகவே கிடைக்கும் என்று கருதப்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் இரும்பு எஃகுத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான சுண்ணாம்புக்கல், டோலமைட், மாக்னஸைட் ஆகியவைகளும் சேலத்தில் இருக்கின்றன. எனவே சேலம் இன்பத் திராவிடத்தின் பர்மிங்ஹாம் என்று கொண்டாடுவதற்குரிய தகுதிபெற்றதாகும்.

ஷெவ்ராயில் பாக்ஸைட்டும், உயர்தரமான மாக்னஸைட்டும் கிடைக்கின்றன. பாக்ஸைட்டிலிருந்து அலுமினியமும், மாக்னஸைட்டிலிருந்து மெக்னீஷியமும் எடுக்கலாம். அலுமினியம், மெக்னீஷியம் ஆகியவைகளின் திருந்திய உருவமல்லவா வானத்தில் வட்டமிடும் ஏரோப்ளேன்!

திருச்சிராப்பள்ளியில் ஜிப்ஸம் என்ற ஒருவகை உப்பு 15·8 மிலியன் டன்கள் கிடைக்கக்கூடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. சிமெண்ட், வயலுக்கு உரமாக உபயோகிக்கப்படும் அமோனியம் ஸல்பேட், கந்தகக் காடி ஆகியவைகள் தயாரிக்க ஜிப்ஸம் மிகமிக முக்கியமான பொருள் என்பது குறிப்பிடத் தக்கது.

மின்சாரத் தொழிற்சாலைகளுக்கு மிகமிக முக்கியமாகத் தேவைப்படும் மைகா நெல்லூரில் கிடைக்கிறது. அம் மைகாக்களைப் பாளம் பாளமாக உரிக்கும் வேலையில் உலகத்திலேயே சிறந்தவர்கள் என்ற பெயரைப் பெற்றவர்களும் நம்மவர்கள் தான்!

திருச்சிராப்பள்ளியில் சீனக் களிமண் ஏராளமாகக் கிடைக்கின்றது. வருங்காலத்தில் திருச்சிராப்பள்ளி பாண்டத்தொழிலில் திராவிடத்தின் ஸ்டாப்போர்ட் ஷயராக மதிக்கப்படுமானால் நாம் ஒன்றும் அதிசயப்படமாட்டோம்.

சமீபத்தில் திருநெல்வேலியில் உயர்தரமான சுண்ணாம்புக் கற்கள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டன. பாபநாசத்து மின்சாரசக்தியின் உதவியால் திருநெல்வேலிச் சுண்ணாம்புக் கற்களை காஸ்டிக் சோடாவாகவும், பிளீசிங் பௌடராகவும் மாற்ற நல்ல வாய்ப்பிருக்கிறது. சுண்ணாம்புக்கற்களின் மூலம் நிலத்திற்குத் தேவையான உரங்களைத் தயாரித்துக் கொள்ளலாம்.

கோதாவரியில் நிலக்கரி கிடைக்கிறது. தென்னார்க்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய பகுதிகளில் லிக்னைட் கிடைக்கிறது.

திருவிதாங்கூர்க் கடற்கரையில் அணுக்குண்டுக்கு உபயோகப்படும் தோரியம் இருக்கிறது.

நெல்லூரிலும் குண்டூரிலும் செம்பு கிடைக்கிறது. கோவை,

இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் பருத்தி ஏராளமாகப் பயிராகிறது. உற்பத்தியாகும் பருத்தியின் அளவை உற்று நோக்கினால், இங்குள்ள மில்கள் மிகமிகக் குறைவு என்பது சாதாரண அறிவுக்கே புலனாகும்.

குண்டூரில் இந்தியாவிலேயே சிறந்த வர்ஜினியா புகையிலை பயிராகிறது.

கரும்பு பயிராவதற்குப் பொருத்தமான சீதோஷ்ண நிலையையும் நிலவளத்தையும் பெற்றிருக்கிறது நம்நாடு. ஆனால் பாதிக்கு மேற்பட்ட உள்நாட்டுத் தேவைகள் இறக்குமதி மூலமே பூர்த்தி செய்யப்படுகின்றன.

நிலக்கடலையும், எள்ளும் பெருவாரியாகப் பயிராகப் பக்குவம் பெற்றிருக்கிறது நம்நாடு, ஆண்டுதோறும் இந்தியாவில் 16,264 டன் ரப்பர் உற்பத்தியாகிறது. அவை 81-04 சதவிகிதம் திருவிதாங்கூர், கொச்சியிலும், 16.55 சதவிகிதம் சென்னை மாகாணத்திலும், 1 90 சதவிகிதம் கூர்ஜாத்திலும், 0.25 சதவிகிதம் அந்தமானிலும், 0.23 சதவிகிதம் மைசூரிலும், 0.03 சதவிகிதம் அஸ்ஸாமிலும் உற்பத்தியாகிறது.

இவ்வளவு இயற்கைச் செல்வத்தைப் பெற்ற இந்நாடு தனித்து வாழமுடியாதாம். ஆசிரியர் இளங்கோ மொழியிலே கேட்கிறோம்.

ஐந்து கோடி (1941). மக்களைக் கொண்ட இக்நாடு வீழின் எந்நாடு வாழும்?

1,42,300 சதுரமைல் பரப்பு கொண்டதும் பெல்ஜியம் இங்கிலாந்து, வேல்ஸ், இத்தாலி போன்ற நாடுகளைவிடப் பெரியதுமான இந்நாடு வீழின் எந்நாடு வாழும்?

எங்கோமும் கடலுடன் கொஞ்சி விளையாடும் 1420 மைல் நீளமுள்ள கடற்கரை கொண்ட இந்நாடு வீழின் எந்நாடு வாழும்?

மூன்று பக்கங்களிலும் மலையரண் கொண்ட இந்நாடு வீழின் எந்நாடு வாழும்?

ஒரு பெண்யானை படுக்கக்கூடிய இடத்தின் விளைச்சல் ஏழு ஆண்யானைகளைப் போஷிக்கும் என்ற பெருமை கொண்ட இந்நாடு வீழின் எந்நாடுவாழும்?

இமயத்தில் கொடிகட்டிய இந்நாடு வீழின் எந்நாடு வாழும்?

ஆங்கிலேயன் ஆட்சிக்கு முன்வரை தனியரசாக வாழ்ந்த இந்நாடு வீழின் எந்நாடு வாழும்?

கப்பல் கட்ட இரும்பும், வானவூர்தி செய்ய அலுமினியமும், அணுக் குண்டு செய்ய தோரியமும் இன்னும் எண்ணத் தொலையாத பொருள்களையும் கொண்ட இந்நாடு வீழின் எந்நாடு வாழும்?

திலோத்தமா

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

லும். [யோசனை......] என்... இப்படிச் செய்தாலென்ன அப்பா?

ஆ: எப்படி?

தி: என் திட்டத்தைச் சொல்வதற்கு முன் ஒன்று சொல்லவேண்டும் உங்களுக்கு ....கொஞ்சநாளைக்கு முன்பு, நானும், ராஜகுமாரியும், சேடிகளும் அரண்மனைக்கு அடுத்துள்ள பொய்கையில நீராடிவிட்டு பூப்பந்து விளையாடிக் கொண்டிருந்தோம். அகஸ்மாத்தாக அங்கு அருணனைச் சந்தித்தோம். அது முதற்கொண்டு காஞ்சனா அவரது நினைப்பாகவே இருந்துவந்தாள்...அருணனும் அப்படியே!

ஆ: ஆ....அப்படியா?.... பிறகு...?

தி: பிறகு காஞ்சனாவும், அருணனும் மறுமுறை அதே இடத்தில் சந்தித்தனர். பின்பு அவர்கள் சந்திக்காத நாளே இல்லாமல் போய்விட்டது... அவர்களிருவரும் இப்போது இணைபிரியாக் காதலர்கள்...!

ஆல: [கோபமாக] ஆ.... அற்பப் புழுக்கள்....அவ்வளவு தூரமா மிஞ்சிவிட்டது காரியம்?

தி: ஆம்....அப்பா!

ஆ: இந்த நாடகம் எத்தனை நாளாய் நடந்து வருகின்றது?

தி: சரியாக நினைவில்லை... ஹூம்......இப்போது சொல்லுகிறேன் என் திட்டத்தை. அப்பா ....ராஜகுமாரி எழுதுவதுபோல் ஓர் ஓலை எழுதி குறிப்பிட்ட இடத்தில் சந்திக்கும்படி செய்கிறேன். அங்கே நீங்களும், சேனாதிபதியும் மறைந்திருந்து....

ஆ: பிடித்துவிடலாம்.

சே: சபாஷ்......சரியான யோசனை. புலிக்கு எலியா பிறக்கும்?

ஆ: சரி திலோத்தமா உன் வேலையை உடனே கவனி....

சே: இதோ....[போகிறான்]

ஆ: சேராளா, இதுவிஷயமாய் எவரிடமும் மூச்சு விடாதே ஜாக்ரதை!

(தொடரும்)

இராதாமணாளன் இயற்றிய

இரு புதிய கற்பனைகள்

இளவரசி ரூ. 1 8 0

200 பக்கங்கள். எல்லோரும் விரும்பி எதிர்பார்த்தது. தீஞ்சுவைத் தமிழ் நடை—நெஞ்சைஅள்ளும் கருத்துக்கள் செறிந்த கற்பனைச் சித்திரம்.

மூடுபனி ரூ. 1 0 0

தமிழ் இலக்கியப் பூஞ்சோலையில் பூத்த புது மலர். மக்கள் மனப் போராட்டங்கள்—உள்ளக் குமுறல்கள் மூடுபனிபோல் மறைந்து நன்முடிவு ஏற்படும் நிலையை—அவருக்கே உரித்தான அழகிய நடையில் விளக்குகிறார் ஆசிரியர்.

பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு சென்னை.

ஐயப்பன் ஊர்வலம்
(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் அவளுக்குப் பிரசவம் நேரிட்டது, ஒரு அரசாங்க அநாதை ஆஸ்பத்திரியில..."

"பிறகு?...."

"பிறகு......பிச்சையெடுத்து ஒருவாறு பிழைப்பை நடத்திக் கொண்டுவந்தாள் பேதை!.... குழந்தையை வைத்துக் காப்பாற்றுவதென்பது அவளால் முடியாத காரியமாகிவிட்டது. எனவே ஒரு நாள் குழந்தையை ஒரு காட்டிலே ஒரு மரத்தின் கீழே இலைகளின்மீது கிடத்தி விட்டு எங்கோ சென்றுவிட்டாள்."

"ம்...அப்புறம்?...."

"எதிர் பாராதவிதமாக நம்ம முனிரத்தின முதலியார் அன்று அந்தக் காட்டிற்குப் பறவை வேட்டைக்குத் தன் வேலையாட்களுடன் வந்திருக்கிறார்!..."

"பிறகு, குழந்தையை எடுத்துக்கொண்டு போய்விட்டார்!... அப்படித்தானே!...அப்புறம்?"

"ஏன் எடுத்துக்கொண்டார் தெரியுமா?...அப்பொழுது அவருக்குப் பிள்ளையே கிடையாது. இந்த அழகிய ஆண் குழந்தை அவரை முற்றிலும் கவர்ந்துவிட்டது எனவே அதை எடுத்துக்கொண்டுபோய் வளர்க்க ஆரம்பித்தார். காட்டிலேயிருந்து குழந்தையைக் கண்டெடுத்ததாலும், முனிரத்தின முதலியார் ரொம்ப ஐயப்பன் பக்தியுடையவராதலாலும் குழந்தைக்கு ஐயப்பன் என்று பெயர் சூட்டினார்கள்! பரமசிவனின் காமப்பசி தீர்ந்ததின் முத்திரையாக—மோகனா ஈன்றெடுத்த மோகனாகை—மாணிக்கமாகப் பிறந்த ஐயப்பன் முனிரத்தின முதலியாரின் வீட்டுக்கொழுந்தாக, செல்வச் செல்லக் குழந்தையாக மாறினான்!.........."

"பிறகு?......"

"பிறகு ஆண்டுகள் உருண்டோடின. ஐந்தாண்டுகள் வரை ஐயப்பன் மிகவும் செல்லமாக, சீமான் வீட்டுப் பிள்ளையைப் போல வளர்த்து வரப்பட்டான்..........."

"அதற்குப்பிறகு?......"

"அதற்குப் பிறகுதான் முனிரத்தின முதலியாருக்கு வரப்பிரசாதம் பிறந்தான்!......"

"ஓஹோ! அதனால் அன்பு அங்கியப்பிள்ளையிடம் செல்லவில்லையாக்கும்!...... பாசமெல்லாம் பெற்றெடுத்தப் பிள்ளையிடம் பறந்து சென்றுவிட்டதாக்கும்!......"

"ஆமாம் ஆமாம். வரப்பிரசாதம் பிறந்த நிமிடத்திலிருந்து ஐயப்பனுக்கு இருந்த எல்லா சொகுசுகளும், சிங்காரங்களும் போய்விட்டன வரப்பிரசாதத்திற்கு! ஆனாலும், முதலியார் ஐயப்பனைக் கைவிடவில்லை. அந்த அளவுக்கு அவர் நல்லவராகத்தானிருந்தார். ஐயப்பனை வேலைக்காரப் பையனைப் போலப் பாவித்து நடத்தினாலும் அவனுக்குச் சாப்பாடு போட்டுப் படிக்க வைத்தார். அதற்கு அவரைப் பாராட்டத்தான் வேண்டும்!......."

"ம்...பிறகு ஆண்டுகள் உருண்டோடினவாக்கும்!......."

"ஆமாம். ஏறத்தாழ இருபதாண்டுகள் உருண்டோடிவிட்டன. வரப்பிரசாதம், ஐயப்பனும் கல்லூரி மாணவர்கள் இப்பொழுது!......இருவர் பண்புகளும், கருத்துக்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. பிரசாத் பக்தியுடையவன், ஐயப்பன் பகுத்தறிவுவாதி. பிரசாத் பணத்திமிரும், பெருமையும் உடையவன் ஐயப்பன் படாடோப மற்றவன்; பெருமையறியாதவன். தன் எண்ணங்களுக்கும், பண்புகளுக்கும் எல்லா விதத்திலும் ஐயப்பன் மாறுபட்டவனாயிருப்பதைக் கண்ட பிரசாத்துக்குப் பொறாமை பெருகியது ஏழை ஐயப்பன்மீது! பலமுறை ஐயப்பனை உருட்டு விழிகளால், மிரட்டும் பேச்சால் தாக்குவான். ஒரு வேலைக்காரனைப் போல ஐயப்பனை மதிப்பான்! ஆனால் ஐயப்பன் இவைகளைப் பொருட்படுத்துவது கிடையாது. முதலியாரும் அவனை அப்படியே பொருட்படுத்திப் பல வேலைகளைச் செய்யச்செய்வார். சபரிமலை ஐயப்பனை அவனுடைய வளர்ப்புத் தந்தையான திருவாங்கூர் மகாராஜா புலிப்பால் கொண்டுவரச் சொன்னதைப் போன்ற அவ்வளவு கொடிய கட்டளைகளைப் போடாமல், தோட்டத்திற்குத் தண்ணீர் பாய்ச்சுதல், கடைக் கணக்கெழுதுதல் முதலிய வேலைகளைச் செய்யச்செய்து அவனை வாட்டினார் அவனுடைய பகுத்தறிவுப் போக்கு அவருக்குத் துளிகூடப் பிடிக்கவில்லை. அடக்க முயன்று கொண்டே வந்தார்!.........

ஒருநாள் கல்லூரி தமிழரங்கில் ஒரு வாதம் நடந்தது. தலைப்பு: மதம் அவசியமா என்பது! அதை ஆதரித்துப் பேசுகின்றவர்களின் பெயர்ப் பட்டியலிலே வரப்பிரசாதம் பெயரும் எதிர்த்துப் பேசுகின்றவர்கள் பட்டியலிலே முதலில் ஐயப்பன் பெயரும் இருந்தன. முதலிலே வரப்பிரசாதம் பேசினான். மதம் அவசியமென்று! மாணவர்கள் "போதும் போதும்!" என்று பதறிக்கொண்டும் புலம்பிக் கொண்டுமிருந்தார்கள். அடுத்து ஐயப்பன் எழுந்தான் அடலேறென! ஒரே கைத்தட்டல். அந்த ஒலி பிரசாதை அதிர வைத்தன. மேடை மீதேறி பேச ஆரம்பித்தான் ஐயப்பன்!

4

"தலைவரவர்களே, தோழர்களே, தோழியர்களே! ......

எனக்கு முன் பேசிய நண்பர் பிரசாத், இந்த நாட்டிலே ஒழுக்கம் இருக்க வேண்டுமானால், ஒழுங்கு நிலவ வேண்டுமானால், அறிவு வளர வேண்டுமானால், அஹிம்சையும் அன்பும் என்றும் இருக்க வேண்டுமானால் மதம் கண்டிப்பாயிருந்தாக வேண்டுமென்று கூறினார். நான் அவரைக் கேட்க ஆசைப்படுகிறேன், இந்த நாட்டிலே மக்களின் ஒழுக்கத்திற்குப் பங்கமளித்து வேசிகளையும், காமவல்லிகளையும், காமாந்தகாரர்களையும், காமக்கோட்டங்களையும் ஏற்படுத்தியது எது என்று? ....(கை தட்டல்) அறிவு வளர வேண்டுமானால் மதம் இருக்கமேண்டுமாம்!......நான் கேட்கிறேன் இந்த நாட்டிலே மதம் அறிவை வளர்த்ததா அல்லது விரட்டியதா என்று! வரலாற்று ஏடுகளைப்புரட்டிப் பார்க்கட்டும் தோழர். அன்னியநாட்டு அரசர்களை அடிபணியவைத்து அரசோச்சிய இந்நாட்டு அரசர்களைக் கேவலம் அன்னக்காவடிகளின் அடிபணியவைத்தது எது? பாதையிலே குறுக்கிட்ட புலிகட்கும் பயப்படாத் தமிழனைப் பூனைக்குப் பயப்பட வைத்தது எது? கூறட்டும் தோழர்!... இவைதான் மதம், அறிவை வளர்த்ததற்கு அத்தாட்சிகளா! ....(கைதட்டல்) அன்பும் அஹிம்சையும் இந்நாட்டிலிருகக வேண்டுமானால் மதம் கண்டிப்பாய் இருக்கவேண்டுமாம்!... மதம் அன்பையும் அஹிம்சையையுமா நிலவச்செய்தது?........ 8000 சமணர்களைக் கழுவிலேற்றியதுதான் அஹிம்சையா? ...ஜான்ஹஸ்ஸைக் கொளுத்தியததான் அஹிம்சையா?...... நீரோ மன்னன் "நெருப்புத் தோட்டங்கள்" வைத்து வேடிக்கைப் பார்த்ததுதான் அஹிம்சையா?.......அண்ணல் காந்தியைச் சுட்டுக்கொன்றததான் அஹிம்சையா?........(கை தட்டல்) எனவே தோழர்களே!... மதம் இந்நாட்டினின்று—ஏன்—உலகினின்றே— மறைந்தாற்றான் மடமை மறையும், கொடுமை குறையும். பழமைப்புழுதிகள் ஒழியும் பகுத்தறிவு பரவும். முன்னேற்றம் மிளிரும்...

(பலத்த கை தட்டல்)

* * * *

"அன்று வாதத்தின் முடிவிலே ஓட்டெடுத்துப் பார்த்ததிலே மதம் அவசியமில்லை என்று ஓட்டளித்த மாணவர்களின் தொகைதான் அதிகமாயிருந்தது. ஐயப்பன் வெற்றி பெற்றான் பிரசாத் தோல்வியடைந்தான். பொறாமையும் பொச்சரிப்பும் பொங்கியெழுந்தன அவன் உள்ளத்தில்!....... அன்று இரவு——

5

"அப்பா, நீங்கள் கொடுத்திருக்கிற செல்லத்தினாலேதான் அவன் என்னை இன்றைக்கு அத்தனைப்பேருக்கு முன்பாக அவமானப்படுத்தினான்!........"

"நீ என்னப்பா சொல்றே?... என்ன நடந்தது?...."

"இண்ணைக்குக் காலேஜிலே ஒரு வாதம் நடந்தது. அதிலே நான் முதலிலே மதம் அவசியமிண்ணு பேசினேன்..."

"அப்புறம் அந்தப் போக்கத்த பயல் அவசியமில்லேண்ணு உளறிக்கொட்டினானா?..."

"உளறினதோடு என்னைச் சவால்விட்டுக் கேள்விகள் கேட்டு அத்தனை பேருக்கு முன்பாக அவமானப்படுத்தினான்... நானும் எவ்வளவு நாட்களுக்குப் பொறுத்துக்கொண்டிருப்பது, தாயில்லாப் பிள்ளைண்ணு!..."

"நீ அழாதே ராஜா!...அந்த நாய் குலேச்சிதிண்ணு நீ அழறியே!...டேய் முனியா!...அந்தக் கழுதையைக் கூப்பிடுடா!.."

"அப்பா, அவன் இந்த வீட்டிலே இருக்கிறவரையிலே நானிருக்கமாட்டேன். ஆமாம். ஒன்று அவன் இந்த வீட்டை விட்டுத் தொலையணும். இல்லாவிடில் நான் தொலையணும். ஆமா. ரெண்டிலே ஒண்ணு...."

"நீ சும்மா யிருப்பா!...... அழாதே!.......டேய் போக்கிரிப் பயலே! ஏண்டா ஒன்னே வளர்த்துப் பெரியவனாக்கிய புண்ணியத்துக்காடா என் மகனை பலபேர் முன்னாலே அவமானப் படுத்தினே?....ஏண்டா நன்றிகெட்ட நாயே!..... பகுத்தறிவு பேச வந்துட்டான். பகுத்தறிவு. டேய் போக்கத்த பயலே! ஒன்னே வளர்த்துப் படிக்கவெச்சது போதும். நீ எங்கியாது போய் எப்படியாவது பொழிச்சிக்கோ! போ!... இனிமேல் என் மூஞ்சிலே முழிக்காதே!.......என்னடா தூண்மாதிரியா நிக்கிறே!...... போடா!......

* * *

"ஐயோ பாவம்!...ம்...அப்புறம்?..."

"அப்புறம் பக்கத்தூரான சவுரிமலைக்குச் சென்றான். அங்கே இவ்வளவு நாட்களுமிருந்தான். பல மேடைகளிலே பேசியும், பத்திரிகைகளிலே எழுதியும் மக்களின் மதிப்பைப் பெற்றான். இந்த வட்டாரமெங்கும் சீர்திருத்தவாதி ஐயப்பனின் பெயர் பரவிவிட்டது!...ஒரு சாதாரண குமாஸ்தாவாக ஒரு ஆபீசிலே வேலை பார்த்துவந்தான்."

"ஆமா, யாரோ ஒரு பெண்ணைக் காதலித்துத்தான் இந்த நிலைக்கு வந்தானுண்ணுல்லாம் பேசிக்கிறாங்களே, அதுபற்றிய விஷபம் ஒனக்குத் தெரியாதா?..."

"அடடே! அவசரப்படாதேப்பா! சொல்றேன்...அந்தப் பெண் யார் தெரியுமா?...... சாட்சாத் பரமசிவ முதலியாரின் மகள்தான்!"

"முறைப்படி தனக்குத் தங்கை அவளென்பது அவனுக்குத் தெரியாதா?..."

"அப்பொழுது அதெல்லாம் ஒன்றுமே தெரியாது அவனுக்கு. முழுவிவரமும் கடைசி நேரத்திலேதாம்பா தெரிஞ்சுது அவனுக்கு!..."

"ஓஹோ!...ம் ..அப்புறம்?..."

"பரமசிவ முதலியாரின் மகள் மங்களம் முன்னேற்ற மணங்கமழும் மல்லிகை மலர். நாகரீக நாரிமணி. பகுத்தறிவுப் பண்பாடும் பைங்கிளி!......... ஐயப்பனின் அழகுத் தோற்றமும் அடுக்கும் துடுக்கும் மிடுக்குமான பேச்சுக்களும் அவளைக் கவர்ந்தன! அவனை எண்ணி எண்ணி ஏங்கச்செய்தன. பிறகு காதல் வலையை அவன் மீது வீசவுஞ் செய்தன! அன்றொருநாளிரவு——————

6

"மிஸ்டர் ஐயப்பன்!......."

"பாருடா இது, ஒரு நிமிஷங்கூட தூங்கவிடாது யாராவது ஒருத்தர் வந்து கதவைத்தட்டித் தொலைக்கிறார்கள்!........"

"டக் டக் டக் டக்!..."

"இதோ வந்துவிட்டேன்!.........ஓ! நீங்களா?......என்ன விஷயம்?......"

"விசேஷமான விஷயம்...!"

"என்ன அது?......உள்ளே வாருங்களேன்!....இப்படி உட்காருங்கள்!.."

"ஆமாம். அந்த...அ...யோக்கி ...யன்......"

"ஏன் இப்படி மூச்சுத் திணறுகிறது? உடலும் நடுங்குகிறதே!..........தண்ணீர் வேண்டுமா?......"

"இல்லை. தேங்ஸ். ஆமாம் அந்த முனிரத்தின் முதலியாரின் மகன் வரப்பிரஸாத்......"

"ஆமாம். அவனுக்கென்ன?......"

"அவனுக்குத் திமிரும் தைரியமும் மிதமிஞ்சிப் போய் விட்டிருக்கிறது!"

"நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்? ...எனக்கு ஒன்றும் விளங்கவில்லையே!..."

"அந்தப்பயல் உங்களைக் கொல்லச் சதி திட்டங்கள் போட்டுவருகிறான்!......எனவே நீங்கள்..."

"அப்பாடா! இதைச்சொல்லவா இப்படித் திணறினீர்கள்? ...இந்த விஷயத்தில் என்ன விசேஷமிருக்கிறது?..."

"எனக்கு உங்கள் உயிரின் மீது உள்ள அன்பும் ஆசையும் அக்கறையுங்கூட......"

"எனக்கு என் உயிரின் மீது இல்லாதது உங்களுக்கு வியப்பாக விருக்கலாம்!..."

"வியப்பிலும் வியப்பாகத் தானிருக்கிறது!.....தயவுசெய்து நீங்கள்.........."

"தற்பாதுகாப்போடு இருங்கள் என்கிறீர்களா?......"

"ஆமாம். தற்பாதுகாப்புடனிருப்பேன் என்று ஒருவார்த்தை கூறுங்கள். அப்பொழுதுதான் என் உள்ளத்திலே கொந்தளிப்பு குறையும். ஆறுதலடைவேன்......"

"அஹ் ஹ்ஹ் ஹஹ் ஹா!......ம்... சரி அப்படியே முன் ஜாக்கிரதையுடனேயே இருக்கிறேன்!...திருப்திதானா?......

"............" (அவள் தலையை அசைத்தாள். விழிகள் பேசின)

"ம்......வந்து......நான் எழுதிய கடிதம்!......"

"கிடைத்தது மிஸ். மங்களா!..."

"அதற்குப்பதில்?..."

"........................."

"கூறமாட்டீர்களா?......

"ம்...எனக்கு ஒன்றும் ஆட்சேபணையில்லை மங்களா!...ஆனால்..."

"உங்களுக்கு ஆட்சேபணையில்லையென்றால், "ஆனால்" எதற்கு அ...த்......"

"உன் பெற்றோர்கள்!.. ...கண்......"

"அவர்களுக்காக, என்னை ஏற்றுக்கொள்ளமாட்டீர்களா?......"

"இல்லையில்லை......ம்......"

"அத்தான்! நீங்கள் எதற்கும் அஞ்ச வேண்டாம். எது என்னவானாலும், யார் எதிர்த்து நின்றாலும் நாம் அஞ்சா நெஞ்சுடனிருந்து போராடுவோம்!...என்ன அத்தான் யோசிக்கிறீர்கள்?....."சரி" என்று ஒருவார்த்தை......"

"ம்..........."

"என்ன அத்தான் மௌனம்?"

"சரி......மங்களா!..."

"அத்தான்!......"

"மங்களா!......"

* * *

"கட்டித் தழுவினான் கோதையைக் கட்டழகன். மங்கை அவன் மார்பிலே சாய்ந்தாள்!......"

"ம்...அப்புறம் இருவரும் இணைபிரியாத காதலர்களாகி விட்டார்களாக்கும்!......"

"ஆமாம். அவர்கள் இணைபிரியா காதல்களாகி விட்டார்கள் இதை ஊரறிந்தது. பரமசிவ முதலியார் அறிந்தார், பலவாறு ஏசி 'நம் பரம்பரைப் பெயரையும் புகழையும் போக்கவா பார்க்கிறாய்?...... பகுத்தறிவு பேசிக்கொண்டு திரியும் அந்தப் போக்கிரிப்பயலையா பதியாக அடைய ஏங்குகிறாய்?...... ஒருக்காலும் உன்கனவு நனவாகாது!.........' என்று பாய்ந்தார் பொற்கொடி மீது!......"

"ம்......அப்புறம்?......"

"அப்புறம் மங்களாவுக்கு மண ஏற்பாடுகள் நடக்கலாயின......"

"மாப்பிள்ளை?......"

"ஓ! அதைக்கூற மறந்துவிட்டேனே! வரப்பிரசாதுதான் வரனாகத்தேர்ந்தெடுக்கப் பட்டார்!—முதலியாரால்!......"

"மங்களா ஒப்புக்கொண்டாளா?.."

"எப்படியப்பா ஒப்புக்கொள்ளுவாள்?...முதலியாரிடம் மீண்டும் மீண்டும் மண்டியிட்டுக் கூறினாள் தனக்குத் திருமணமே வேண்டாமென்று!......முதலியார் மங்கையின் முறையீட்டைப் பொருட்படுத்தவில்லை......கடைசியில் தன் காதலனோடு எங்காவது ஓடிப்போய் வாழ்க்கை நடத்த திட்டமிட்டாள்! ...."

"ம்...ம்...நல்ல திட்டந்தான்! ...."

"கதையைக் கேளப்பா!......சில வாரம் இப்படியிருக்கும் பொழுது ஒருநாள் இரவு ஐயப்பன் தன் அறையில் உட்கார்ந்துகொண்டு ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தான்! புயல்! பெரும்புயல்!—அவன் மனத்திலே மட்டுமல்ல

உண்மையிலேயே அன்று பெரும் புயல் அந்த ஊரில் வீசிற்று. இடி முழங்கிற்று. மின்னல் பளிச், பளிச்சென்று மின்னிற்று. மழை ஜோவென்று பெய்ய ஆரம்பித்தது. அந்த மழையிலே நனைந்து கொண்டு வந்த ஒரு கிழவி அவன் அறைக்கு முன் — தாழ்வாரத்தில் — உதறிக் கொண்டே நின்றாள். சன்னல் வழியாக அவளைப் பார்த்த ஐயப்பன், "யாரம்மா அது?...உள்ளேதான் வாயேன்!...ஏன் அப்படி நனைந்து கொண்டு வெளியே நிற்கிறே!...." என்றான் கிழவி உள்ளே வந்தது, ஒரு மூலையிலே ஒடுங்கி உட்கார்ந்தாள் வெகுநேரம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் ஐயப்பன். நனைந்திருந்த அவள் உடலைத் துடைக்கத் தன் வேட்டி ஒன்றைக் கொடுத்தான். அவள் நடுங்கிக் கொண்டே! 'ரொம்ப சலாமுங்க' என்றாள்!......"நீ எந்த ஊரம்மா?......" என்றான் ஐயப்பன். "இதே ஊர் தானுங்க சாமி! ஆனா இந்த ஊருக்கு ஏறக்குறைய பதினஞ்சு வருஷங்களுக்குப் பின்னாலே இப்பத்தான் வாரேன்!......"

"அப்போ இவ்வளவு காலமா நீ......"

"பல ஊர்சுற்றிப் பிச்சையெடுத்துப் பொழைச்சிகிட்டு வந்தேனுங்க!"

"நீ ஏன் உன் சொந்த ஊரை விட்டுட்டு இப்படிப் பல ஊர்சுத்த ஆரம்பிச்சே!......"

"அதையேங்கேட்டு என் வயித்தெரிச்சலைக் கௌப்பறிங்க சாமி?......" என்று ஆரம்பித்து தன் சோகவரலாறு பூராவையும் கூறி,

"ம்...நான் பெற்றெடுத்த என் செல்வ மகனின் கதி என்ன ஆச்சோ!......அந்தக்காட்டிலே துஷ்ட மிருகங்களெதாவது அடித்துத் தின்னுடுச்சோ, இல்லாமப் போனா......................"

"அம்மா!......அம்மா!.......நான் தானம்மா உன் மகன்! அந்தக்காட்டிலேருந்து என்னையெடுத்து பக்கத்தூர் முனிரத்தின முதலியார்தாம்மா வளர்த்தாரு!......" ஆனந்தக் கண்ணீர்வழிய அன்னையை அழைத்து இப்படிப் பேசினான் மகன்!

"ஆ! என் ராசா!...எம்மாணிக்கமே!...முத்தே!..." அன்னை ஆனந்தந்தாங்கமுடியாமல் ஆச்சரியத்துடன் எழுந்தாள்—மகனைக் கட்டி முத்தமிட்டாள்!

"படார்!.."

"அய்யோ! அம்மாடி!......அய்யோ!..." ஆம். அக்கிழவி—மோகனா—எழுந்த பொழுது அவள் தலையைப் பதம்பார்த்தது அவள் தலைக்குமேலிருந்த சன்னல் கதவு. கீழே விழுந்துவிட்டாள். இரத்தம் வடிந்தது அவள் தலையிலே! வாயிலே நுரைதள்ளலாயிற்று.

"அய்யோ! அம்மா!..."—அலறினான்; அங்கலாய்த்தான். அழுது புரண்டான்!—ஏழைமகன்!

"என் ராசா!......."—கடைசி வார்த்தையைக் கூறிவிட்டுக் கண்களை மூடிவிட்டாள் தாய்! பேதை புலம்பினான் புரண்டழுதான்.

மணி ஒன்பதாயிற்று! ஒன்பது மணிக்குத் தன்காதலியைச் சந்திக்க அவன் வருவதாகக் கூறியிருந்தது அவன் நினைவுக்கு வந்தது!......அதோடு தன் ஆசைக் காதலி, தனக்கு முறைப்படி தங்கையென்பதும் அவன் நினைவுக்கு வந்தது. இதை அவளுக்கு உடனே அறிவிக்க வேண்டுமென்று அவளைச் சந்திக்கும் பூங்காவிற்கு ஓடிவந்தான்!......அதற்குள்,......"

"அதற்குள் என்ன நடந்தது தோழா?"

"தன் ஆருயிர்க்காதலரின் வரவை எதிர்நோக்கி அந்தப் பூங்காவிலே உட்கார்ந்து கொண்டிருந்தாள் மங்களம்! அப்பொழுது——

7

"ஏ! மாஞ்செடியே, அவர் வருவாரா யில்லையா என்பதைச் சொல்ல மாட்டாயா?...உன் இலைகளை அசைத்து, "வருவார்" என்று கூறிவிட்டால் போதுமா, எப்பொழுது வருவாரென்று சொல்லு!..."

"இதோ வந்திருக்கிறரென்று சொல்லு மாஞ்செடியே!....."

"...யார்? வரப்பிரசாதம்!......எங்கே வந்தீர்கள்?....."

"இது என்ன கேள்வி கண்ணே!....."

"ம்!....என்னை நெருங்க வேண்டாம்!....."

"ஏன்? நீ தீண்டப்படாதவளா?....."

"இல்லை. நீ என்னைத் தீண்டத் தகுதியற்றவன்!......"

"என்ன சொன்னாய்?......போக்கிரிப் பயலோடு கள்ளக் காதல் கொண்டு திரியும் கள்ளியே! என்னைச் சற்றும் மதிக்காது!..."

"போதும்! நிறுத்து உன் பேச்சை!........இங்கே இப்பொழுது உனக்கென்ன வேலை?......"

"வேலையா?......அஹ்ஹஹ்!......வேலையில்லாமலில்லை. வேலையிருப்பதால்தான் வந்திருக்கிறேன்!......ஏய்! இதோ பார். நீ என் இச்சைக்கு அடங்கினால் "இச்" என்ற முத்தங்கள்!......இல்லாவிடில்,......ஆம்......இந்த ரிவால்வர் உன் மார்பிலே முத்தமளிக்கும்!......

"ஆ!......"

"மங்களா மிரண்டுவிட்டாயா?...பயப்படாதே கண்ணே!"

"ம்!......எட்டி நில்."

"மங்களா!......"

"என்னை நெருங்காதே! உன் சூழ்ச்சிக்கு வீழ்ச்சி நிச்சயம்!"

"மங்களா! கடைசி முறையாகக் கேட்கிறேன்!"

"ம்! என்னை அசைக்க முடியாது உன்னால்!......நடத்து உன் வேலையை!"

"மங்களா!"

"ஊஹூம்"

டமார்!

* * *

துப்பாக்கிக் குண்டு துடியிடையாளின் மார்பிலே பாய்ந்தது! வஞ்சி தரையிலே விழுந்தாள். குருதி வெள்ளம் பெருக்கெடுத்தோட ஆரம்பித்தது!...அவள்வேதனைப்படுவதை வெறிக்க வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் வரப்பிரசாதம்!......ஐயப்பன் வந்தான்! திகைத்தான். துடித்தான்!......"ஐயோ! மங்களா!" என்று கதறினான்.

"அ...த்...தா...ன்..." அணங்கு இறுதி வார்த்தையைக் கூறிவிட்டாள்!

அவள் கரங்களைப் பற்றிக் கொண்டு,

"ஐயோ! மங்களா! நான் உன் அத்தானில்லை. அண்ணன்! ஆம். அண்ணன்!......" என்று புலம்பினான் ஐயப்பன்!

அந்த வார்த்தைகள் பிணமாகி விட்ட மங்களாவுக்கு எப்படிக்கேட்டிருக்க முடியும்?......

"டேய் அயோக்கியப் பயலே! அக்கிரமக்காரனே! ஆணவம்பிடித்தலையும் அறிவிலியே!........என்

(4-ம் பக்கம் பார்க்க)

Edited, Printed and Published bY P. C. Manickavachagam alias Kanchi Manimoliyars
Free Printers 147, C al Merchant St., Madras. Joint-Editor, M. Ilancheliyan B. A.(Hon)